பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 10 புதன்கிழமை 26.08.2020 கதிர் 290

இது ரகசியம் அல்ல!

தென்னிலங்கை ஊடகங்களில் இன்று அதிகம் வசவுகள், திட்டுகள் வாங்கிக் கட்டுபவர் முன்னாள் வடக்கு நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்தான்.

நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய கன்னி உரை 'கண்ணிவெடி' உரையாக பக்கம்02 »

# கூட்டமைப்பின் பேச்சாளர், கொறடா பதவிகளில் மாற்றம் ஏதுமில்லை


## கட்சியின் ஊடகப் பிரிவு உத்தியோகபூர்வ அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 26

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் மற்றும் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் (கொறடா) ஆகிய பதவிகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று ஊடகங்களில் வெளியான செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை.**

**– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பிரிவு அதன் உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளது.** பக்கம் 02 »

## குருநாகல் மேயருக்கு எதிரான பிடியாணைக்குத் தடை விதிப்பு



குருநாகல் மாநகர மேயர் உள்ளிட்ட 5 பேரைக் கைது செய்வதற்காக பிறப்பிக்கப்பட்டுள்ள பிடியாணையை அமுல்படுத்துவதைத் தடுக்கும் வகையில் மேன்முறையீட்டு பக்கம் 02 »

## கிழக்கு தொல்பொருள் செயலணிக்கு மேலும் 4 பிக்குகள்



கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை முறையாக மதிப்பீடுசெய்து பாதுகாப்பதற்கு அமைக்கப்பட்ட ஜனாதிபதி செயலணிக்கு மல்வத்து, அஸ்கிரிய பீடங்களைச் சேர்ந்த தேரர்கள் நால்வரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

தமிழ்ப் பிரதிநிதியை செயலணியில் இணைக்குமாறு அரசாங்கத்தில் பக்கம் 02 »

## கொங்கிறீட் முகப்புக் கூரை விழுந்ததில் தொழிலாளி பலி

### அம்பனையில் நேற்றுச் சம்பவம்



யாழ் சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அம்பனைப் பகுதியில் வீடு திருத்த வேலையையில் ஈடுபட்ட கட்டடக் கூலித் தொழிலாளி ஒருவர் கூரைத்த எத்தை உடைக்க முற்பட்ட வேளை கொங்கிறீட்டிலான முகப்பு பக்கம் 02 »

## மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன் நடைபெறும் செல்வச்சந்நிதி தேர்!

யாழ்ப்பாணம், ஓக. 26

வடமராட்சி – தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத் தேர்த்திருவிழா சுகாதார நடைமுறைகளைபின்பற்றி மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன் இடம்பெறவுள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலய மஹோற்சவம், சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி சிறப்பாக இடம்பெற்று வரும் நிலையில், செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி தேர்த் திருவிழா இடம்பெறவுள்ளது.

ஆலயத்துக்கு வருகைதரும் பக்தர்கள், சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, சமூக இடைவெளியைப் பேணுவது கட்டாய பக்கம் 02 »

### தலைவர், தேசியப் பட்டியல் விவகாரத்தில்

## முடிவு காணாது முடிவுக்கு வந்தது ஐ.தே.கவின் செயற்குழுக் கூட்டம்

கொழும்பு, ஓக. 26

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ மாற்றம் மற்றும் தேசியப் பட்டியல் நியமன விவகாரங்களில் எவ்வித முடிவும் காணப்படாது முடிவுக்கு வந்துள்ளது நேற்றைய மத்திய செயற்குழுக் கூட்டம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுப் பிற்பகல் சிறிகொத்தாவில் நடைபெற்றது.

இதன்போது, கட்சியின் தலைமைத்துவம் பக்கம் 02 »

## சர்வாதிகாரப் போக்கை நோக்கி நாடு மீண்டும் திரும்புகின்றதா?

### கேள்வி எழுப்புகின்றார் சம்பிக்க



கொழும்பு, ஓக. 26

கடந்த 2013ஆம் ஆண்டில் சர்வாதிகாரப் போக்கிலான 18 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட முன்னதாக 17 ஆவது திருத்தம் நீக்கப்பட்டது. தற்போது அதே அரசால் 19 ஆவது திருத்தம் நீக்கப்பட்டு, புதிய அரசமைப்பொன்று அறிமுகப்படுத்தப்படுவது குறித்துப் பக்கம் 02 »

[redacted]

## இந்தியத் தூதுவருடன் மு.கா. முக்கிய சந்திப்பு



கொழும்பு, ஓக. 26

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பக்லேவை சந்தித்துள்ளனர். பக்கம் 02 »

## கொரோனாவால் இலங்கையில் 4 இலட்சம் பேர் தொழில் இழப்பு

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கவலை

கொழும்பு, ஓக. 26

கொரோனா வைரஸ் நெருக்கடி நிலைமையால் நாட்டில் 4 இலட்சம் பேர் தமது தொழிலை இழந்துள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பொரளைப் பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

நாங்கள் ஆட்சிக்கு வந்திருந்தால் கொரோனா வைரஸ் நெருக்கடியால் வேலையிழந்த நான்கு இலட்சம் பேருக்கும் புதிய தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்திருப்போம். பக்கம் 02 »

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறி விட்டது.

எது, எப்படி என்றாலும் இந்தச் சமயத்தில் அவர் இப்படியான ஒரு சர்ச்சைக்குள் சிக்குவது மிக ஆபத்தானது என்பது தான் எனது கருத்து.

என் ஊடக வாழ்க்கையை கொழும்பில் ஹல்ஸ்டோர்பில் ஒரே சமயத்தில் நீதிமன்றச் செய்தியாளராகவும், சட்டக் கல்லூரி மாணவனாகவும் ஆரம்பித்தவன் நான். இலங்கையின் நீதித்துறைப் போக்கை பக்கத்திலிருந்து அவதானித்து வந்தவன். பல சமயங்களில் எனது அனுமானம் பிழைத்ததில்லை.

இலங்கையின் எந்தத் துறையும் இனவாத சகதிக்குப் புறம்பானதல்ல. பயங்கரவாதத் தடுப்புச் சட்டங்கள், இனவாத விவகாரங்களில் இலங்கை நீதித்துறையின் சீத்துவம் நாம் நன்கு அறிந்தவைதான். இதற்கு மேல் நான் விவரமாக விடயத்துக்குள் இறங்குவது என் மீது நீதித்துறை அவமதிப்புக் குற்றச்சாட்டைக் கொண்டு வந்து விடும்.

நம் வாசகர்கள் கற்றறிந்தவர்கள். நாங்கள் வரிகளுக்கு இடையில் எழுதாமல் விடும் வாசகங்களையும் வாசித்துப் புரிந்து கொள்ளக் கூடியவர்கள் அவர்கள்.

இனி விடயத்துக்கு வருகிறேன்.

நீதியரசர் விக்னேஸ்வரன் விடயத்தில் நான் *'காலைச்சுற்றிய பாம்பு, கடிக்காமல் விடாது'* என அடிக்கடி எச்சரித்து நினைவூட்டும் விடயம் ஒன்று உண்டு.

அது, நீதியரசர் விக்னேஸ்வரன் வடக்கு முதலமைச்சராக இருந்த போது அவரின் அமைச்சர்களில் ஒருவராக இருந்த டெனீஸ்வரன் தம்மை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கிய முறைமை தவறு எனத் தெரிவித்து நீதியரசருக்கும் மற்றும் இரு அமைச்சர்களுக்கும் எதிராகத் தாக்கல் செய்த இரு வழக்குகள் சம்பந்தமானது.

முதல் வழக்கிலேயே டெனீஸ்வரனை அமைச்சர் பதவியில் மீள அமர்த்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் விக்னேஸ்வரனுக்கு இடைக்கால உத்தரவு வழங்கியது. ஆனால் அந்த இடைக்கால உத்தரவை ஏற்றுச் செயற்பட விக்னேஸ்வரன் மறுத்து விட்டார்.

அதனால் அவருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கை - இரண்டாவது வழக்கை - தொடர்ந்தார் டெனீஸ்வரன்.

முதலாவது, வழக்கில் இடைக்கால உத்தரவை அங்கீகரிக்கும் பக்கம் 11 »

## கிழக்கு தொல்பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கம் வகிக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரியிருந்தபோதும் பௌத்த பீடாதிபதிகள் உட்பட மேலும் நான்கு தேரர் இந்தச் செயலணிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசமைப்பின் 33 ஆவது பிரிவின் மூலம் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி பௌத்த ஆலோசனை சபையின் ஆலோசனைக்கு அமைய இந்தச் செயலணி கடந்த ஜூன் மாதம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது.

இந்தச் செயலணிக்கு அஸ்கிரிய பீடத்தின் வெண்டறுவே தர்மகீர்த்தி ஸ்ரீ ரதனபால உபாலி அபிதான அனுநாயக்க தேரர், மல்வத்து பீடத்தின் பதிவாளர் கலாநிதி பஹமுணே சுமங்கல நாயக்க தேரர், அஸ்கிரிய பீடத்தின் பதிவாளர் கலாநிதி மெதகம தம்மானந்த நாயக்க தேரர், மல்வத்து பீடத்தின் நிருவாகசபை உறுப்பினர் கலைமாணி அம்பன்வெல்லே ஸ்ரீ சுமங்கல தேரர் ஆகிய நான்கு பேரும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர் என அதி விசேட வர்த்தமானி ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை அடையாளம் காண்பது, அடையாளம் காணப்பட்ட இடங்கள் மற்றும் தொல்பொருள்களைப் பாதுகாத்து மீட்டெடுப்பதன் மூலம் தொல்பொருள் பாரம்பரியத்தை நிர்வகிப்பதற்கான பொருத்தமான திட்டத்தை கண்டறிந்து செயற்படுத்தும் நடவடிக்கையில் இந்த செயலணி நியமிக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த தளங்களின் கலாசார மதிப்பைப் பாதுகாப்பதற்கும், உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் இலங்கையின் தனித்துவத்தை ஊக்குவிப்பதற்கும், அத்தகைய மரபுகளை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை செய்வதற்கும் இந்தப் பணிக்குழு செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குருநாகல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தால் இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இத்தடை மேற்படி மனு மீதான விசாரணை நிறைவடையும் வரை செல்லுபடியாகுமென நீதியரசர்கள் குழு தெரிவித்துள்ளது.

குருநாகல் நகர மத்தியில் அமைந்துள்ள மன்னர் காலத்திற்குரியதெனக் கூறப்படுகின்ற அரச கட்டடத்தை அகற்றிய சம்பவம் தொடர்பாகவே குருநாகல் முதல்வர் துசார சஞ்சீவ விதாரண உள்ளிட்ட 5 பேரை கைதுசெய்வதற்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இக்கட்டடம் தொல்பொருள் தொன்மை வாய்ந்ததாக தொல்பொருள் சட்டத்தின் கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லையென நகர முதல்வர் உட்பட 5 பேரும் தெரிவித்திருந்தனர்.

சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் தனக்கு எதிராக தொல்பொருள் சட்டமூலத்தின் கீழ் குருநாகல் நீதிவான் நீதிமன்றத்திற்கு விளக்கமளித்து கைது செய்வதற்காக பிடியாணை பெறப்பட்ட செயற்பாட்டில் பல்வேறு குளறுபடிகள் காணப்படுகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மேற்படி விடயங்களைக் கருத்திற்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் பிடியாணை அமுல்படுத்தப்படுவதை தடை செய்யும் வகையில் இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பித்தது.

எனினும் இவ்வுத்தரவின் மூலம் விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிஸாருக்கோ, நீதிமன்றின் செயற்பாட்டுக்கோ எவ்வித தடையுமில்லையென நீதியரசர்கள் வலியுறுத்தினர்.

மனுதாரருக்கு இன்றைய தினத்திலோ அல்லது நாளையே குருநாகல் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பித்த நீதியரசர்கள் குழு அவரை விளக்கமறியலில் வைப்பதிலிருந்து தவிர்த்து கொள்ளுமாறும் உத்தரவிட்டது.

மனுதாரர்களுக்கு எதிரான குற்றங்கள் பிடியாணையின்றி கைதுசெய்வதற்கு பொலிஸாருக்கு அதிகாரங்கள் காணப்படுகின்றமை தவறான விடயங்கள் என்பதால் நீதிவான் ஏன், பிடியாணை பிறப்பித்தார் என்பது பிரச்சினைக்குரிய விடயமென மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தலைமை நீதியரசர் ஏ.எச்.எம்.டி.நவாஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதி வழங்குவதாக தெரிவித்த நீதிபதி மனு மீதான விசாரணையை செப்ரெம்பர் 14 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாக அறிவித்தார்.

## இந்தியத் தூதுவருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசால் காசிம், ஹாபிஸ் நஸீர் அஹமட், எம்.எஸ்.தௌபீக் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அத்துடன் இந்தியத் தூதரக அதிகாரிகளும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

இலங்கையில் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும், சமகால அரசியல் நிலைவரம் குறித்தும் இதன்போது பேசப்பட்டன என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. தெரிவித்தார்.

(விரிவான செய்தி 12ஆம் பக்கத்தில்...)

## கொங்கிறீட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூரை விழுந்ததில் அதில் சிக்குண்டு உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் அல்ரர் போல் (வயது 42) என்ற ஒரு பிள்ளையின் தந்தையா வார். இவர் நவாலி கலையரசி லேன் சேர்ந்தவராவார்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை சுன்னாகன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சர்வாதிகாரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசப்படுவதானது நாடு சர்வாதிகாரப்போக்கிலான வரலாற்றுக்கு மீண்டும் திரும்பிக்கொண்டிருப்பதற்கான அறிகுறியா?

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டைப்பொறுத்தவரையில் அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் ஒரு சாபக்கேடாக இருக்கின்றது என்றும், நாட்டின் மிக முக்கிய அடிப்படைகளாக இருக்கின்ற பொருளாதாரம், பாதுகாப்பு, ஜனநாயகம் ஆகிய மூன்றையும் இது வலுவிழக்கச் செய்திருக்கின்றது என்றும் கூறியிருக்கும் ஆளுந்தரப்பு, இவ்வருட இறுதிக்குள் அந்தத் திருத்தத்தை நீக்கி புதிய அரசமைப்பொன்றைக் கொண்டுவர இருக்கின்றது என்றும் அறிவித்திருக்கின்றது.

இந்தநிலையில், ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரக் குறைப்பு, சுயாதீன ஆணைக்குழுக்களின் உருவாக்கம், அரசமைப்புப் பேரவையின் அறிமுகம், தகவல் அறியும் உரிமைச் சட்டம் உள்ளபங்கலாக பல்வேறு ஜனநாயக மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்த 19 ஆவது திருத்தம் நீக்கப்படப்படுவதற்கு எதிராகப் பல்வேறு தரப்பினரும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் இது குறித்து தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள சம்பிக்க ரணவக்க மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

தற்போது ஆட்சிப்பீடம் ஏறியிருக்கும் அரசு, இதற்கு முன்னர் 2013ஆம் ஆண்டில் அதன் ஆட்சிக்காலத்தின்போது அரசமைப்பில் முற்போக்கான திருத்தங்களை ஏற்படுத்துவதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதி அளித்தனர். எனினும், சர்வாதிகார முறையொன்றை நோக்கிச் செல்வதற்கு ஏதுவான அரசமைப்பின் 18ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு முன்னதாக அரமைப்பின் 17ஆவது திருத்தத்தை நீக்கினார்கள்.

இந்தநிலையில், தற்போதும் அதே அரசின் பிரதிநிதிகள் அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை நீக்கி, அதன் பின்னர் புதிய அரசமைப்பொன்றைக் கொண்டு வருவது பற்றிப் பேசுகின்றார்கள். அவ்வாறெனின் வரலாறு மீண்டும் திரும்புகின்றதா? - என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## மட்டுப்படுத்தப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பக்தர்களைப் பாதுகாக்கும் வகையில், இந்தக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும் நிலையில், வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகம் உற்சவகாலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார வழிகாட்டுதல்கள் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளது.

அந்தவகையில் சுகாதாரத்துறையினரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் உற்சவகாலத்தில் 150 அடியவர்கள் மாத்திரம் வழிபாடு செய்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள். அடியவர்கள் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தை எடுத்துவருதல் கட்டாயமானதாகும். இவை வீதித் தடைகளில் ஒவ்வொரு தடவையும் பதிவு செய்யப்படும். முகக்கவசங்களை அணிந்திருந்தல் கட்டாயமானதாகும். சமூக இடைவெளியை அடியவர்கள் பின்பற்ற வேண்டும்.

கட்டாயத் தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டவர்கள், சுய தனிமைப்படுத்தப்பட்டவர்கள் ஆகியோர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்தமைக்கான ஆவணத்தை தம்வசம் வைத்திருக்க வேண்டும். காய்ச்சல், தடிமன், தும்மல், இருமல் உள்ளவர்கள் ஆலயத்துக்கு வருவதைத் தவிர்க்க வேண்டும்.

தாகசாந்தி, அன்னதானம் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அங்கப்பிரதட்சணம், அடி அழித்தல், கற்பூர சட்டி எடுத்தல், காவடி எடுத்தல் போன்ற நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

திருவிழாக் காலங்களில் இடம்பெறும் திருமண நிகழ்வுகளின்போது 20 நபர்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படும். விசேட போக்குவரத்துச் சேவை இம்முறை இடம்பெறமாட்டாது - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் முக்கிய இரு பதவிகள் அதன் பங்காளிக் கட்சிகளைச் சேர்ந்த இருவருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்று கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கையின் பிரபல ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. அதன்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளராக தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொறடாவாக நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும், அந்த ஆங்கில ஊடகத்தால் வெளியிடப்பட்ட செய்தி முற்றிலும் தவறானது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பிரிவு அதன் உத்தியோக பூர்வ ருவிட்டர் பக்கத்தில் விளக்கமளித்துள்ளது.

அந்த ஆங்கில ஊடகத்தில் வெளியான செய்தியை மேற்கோள்காட்டி கூட்டமைப்பின் ஊடகப் பிரிவு அதன் உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது:-

இந்தச் செய்தி முற்றிலும் தவறானதாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இடம்பெறும்போது நாடாளுமன்றக் குழுவின் தலைவர் (கொறடா) மற்றும் ஊடகப் பேச்சாளர் ஆகிய பதவிகளுக்குரிய நியமனங்கள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும். எனினும், தற்போது வரையில் இந்தப் பதவிகளில் எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்தப்படவில்லை - என்றுள்ளது.

## கொரோனாவால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறாயினும் தற்போதைய அரசு தொழில் இழந்தவர்களுக்காக புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன் - என்றார்.

இந்தச் சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

## முடிவு காணாது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் தேசியப் பட்டியல் உறுப்பினர் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ள போதிலும் கட்சியின் இவை குறித்து எவ்வித இறுதித் தீர்மானங்களும் எட்டப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், எதிர்வரும் செப்ரெம்பர் 05ஆம் திகதி நடைபெறவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கட்சியின் தலைமைத்துவம் மற்றும் தேசியப் பட்டியல் உறுப்பினர் குறித்து இறுதித் தீர்மானங்கள் எடுக்கப்படும் என்று அக்கட்சி தெரிவித்துள்ளது.

## யாழ்.நகரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தபோதும் அப்போது வர்த்தகர்கள் மற்றும் உணவகங்களின் கோரிக்கையின் பெயரில் மேற்படி தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

இந்த தீர்மானத்தினை மாநகர சபை எல்லைப்பகுதிக்குள் எதிர்வரும் செப்ரெம்பர் 15ஆம் திகதி முதல் நடவமுறைப்படுத்தும் முடிவு நேற்றைய தினம் மாநகர முதல்வர் இ.ஆனல்ட் தலைமையில் இடம்பெற்ற சபையின் மாதாந்த அமர்வில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறு நிறைவேற்றபபட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்த போதிய கால அவகாசம் இருப்பதனால் உணவகங்கள், வர்த்தக நிலையங்கள் உடன் மாற்று பாவனைப் பொருளாக வாழை இலை , தாமரை இலை, தேக்கம் இலை, வாழை மடல் போன்றவற்றை தயார் செய்ய முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

பொலித்தீனைத் தடை செய்து, வாழை இலை போன்றவற்றைப் பயன்படுத்து மாறு கோரிய சமயம் உடனடியாக மாற்று ஏற்பாட்டினை செய்ய முடியாது, சிறிது கால அவகாசம் தேவை என வர்த்தக சங்கம் ஊடாகவும் நேரிலும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சந்திரசிறிக்குப் பின்னர் வடக்கில் எந்த ஆளுநரும் செயற்படவில்லை!



## குற்றஞ்சாட்டுகிறார் அமைச்சர் டக்ளஸ்

கொழும்பு, ஓக.26

முன்னாள் இராணுவ அதிகாரி ஜெனரல் சந்திரசிறிக்கு பின்னர் வடக்கில் ஆளுநர்களாக நியமிக்கப்பட்ட எந்த சிவில் அதிகாரியும் தமது வேலையை ஒழுங்காகச் செய்யவில்லை என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வழங்கல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வவுனியாவிற்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) விஜயம் செய்த அவர், அரச நியமனங்கள் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகளைச் சந்தித்துவிட்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

அரச நியமனங்களில் பலரது விண்ணப்பங்கள் பல்வேறு காரணங்களுக்காக நிராகரிக்கபட்டுள்ளன என அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவால் அவர்களது சான்றிதழ்கள் அங்கீகரிக்கப்பட்டிருப்பின் அவர்கள் பட்டதாரிகளாக உள்வாங்கப்படவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய இறுதி நிலைப்பாடாக இருந்தது.

அந்த வகையில் மேலதிகமாக 10 ஆயிரம் பேருக்கு அரச நியமனத்தை வழங்குவதற்கு ஜனாதிபதி இணங்கியிருக்கின்றார். அந்தவகையில் ஈ.பி.எவ். பெயர் பதிவு மற்றும் மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கிகரிக்கப்பட்டிருந்தவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தால் நீங்கள் மேல்முறையீட்டிற்காக விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன் ஒரு லட்சம் வேலை வாய்ப்புத் திட்டம் வடக்கு கிழக்கிலும் செயற்படுத்தப்படும். இந்தவிடயம் தொடர்பாக நாளையதினம்(இன்று) அமைச்சரவையில் கலந்துரையாடவுள்ளேன்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை தென்னிலங்கைத் தலைவர்கள் மாத்திரம் எதிர்க்கவில்லை தமிழ்த் தலைவர்களும் அதனை எதிர்த்துள்ளனர். 13 ஆவது திருத்தச்சட்டத்தை விடுத்து வேறு ஒரு தீர்வு வேண்டும் என்று புலித்தலைமை மற்றும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் அன்று இதனை எதிர்த்தார்கள்.

எனினும் அதனை நடைமுறைப்படுத்தவேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகவும் இருக்கின்றது. என்னுடைய நிலைப்பாடும் அதுவே. அதுதான் சாத்தியமானது. மக்கள் எனக்கு கூடிய ஆசனங்களை தந்திருந்தால் இவற்றை நான் இலகுவாகத் தீர்த்திருப்பேன்.

வடக்கில் இராணுவ அதிகாரியை ஆளுநராக நியமிக்கும் நிலைப்பாடு இதுவரை அரசிடம் இல்லை. எனினும் முன்னாள் ஜெனரல் சந்திரசிறியை ஆளுநராக நியமிக்குமாறு இந்த அரசாங்கம் வந்தவுடன் நான் கோரியிருந்தேன்.

ஏனெனில் அவருக்கு பின்னர் ஆளுநராக வருகை தந்த எந்த சிவில் அதிகாரியும் தமது வேலையை ஒழுங்காகச் செய்யவில்லை. எனவே சந்திரசிறியை நியமிக்க கோரினேன். எனினும் இராணுவ அதிகாரியை நியமிக்காமல் சிவில் அதிகாரியையே நியமிக்கவேண்டும் என்று ஜனாதிபதியும் பிரதமரும் அன்று கூறினார்கள். – எனத் தெரிவித்தார்.

## யாழ். நகரத்தில் உரிய அனுமதியின்றி கோழி வளர்ப்பு, இறைச்சி விற்பனையில்

யாழ்ப்பாணம்,ஓக.26

யாழ். மாநகர எல்லைக்குள் 46 பேர் கோழி வளர்த்து இறைச்சிக்கான விற்பனையில் ஈடுபடுகின்றனர். இதில் 35 பேர் எந்த அனுமதியும் பெறாமல் இதனைச் செய்கின்றனர். ஆக ஐந்து பேர் மட்டுமே முழுமையான அனுமதி உடன் இயங்குகுன்றனர்.

மாநகர எல்லைப் பரப்பிற்குள் பலர் எந்தவிதமான அனுமதி இன்றியும், சிலர் பதிவுகளை மட்டும் கொண்டும், கோழி வளர்ப்பில் ஈடுபடுகின்றனர். அவ்வாறு வளர்ப்பவர்கள் இறைச்சி விற்பனையிலும் ஈடுபடுகின்றனர். அந்தக் கோழிகளின் கழிவுகளை உரிய கட்டணத்தைச் செலுத்தி அகற்றாது கண்ட இடத்திலும் வீசுகின்றனர். இதேநேரம் அனைவரும் வீடுகளில் வைத்து விற்பனை செய்வதனால் இறைச்சிக் கடைகளின் கேள்வி குறைந்து சபை வருமானமும் பாதிக்கப்படுகின்றது. இவை அனைத்திற்கும் மேலாக இதில் கழிவு அகற்றல் மேற்கொள்வதே பெரும் பிரச்சினையாகவுள்ளது. கோழி வளர்ப்போர் கிழமைக்கு ஒரு தடவை கழிவு அகற்றப்படுவதாக கூறப்படுகின்றது. நடைமுறைகளைச் சீராக பின்பற்றினால் வளர்ப்பிற்கு அனுமதிக்கலாம்.

– இப்படி நேற்றைய தினம் யாழ் மாநகர முதல்வர் இ.ஆனல்ட் தலைமையில் இடம்பெற்ற யாழ் மாநகர சபையின் மாதாந்த அமர்வில் தீர்மானிக்கப்பட்டது.

வாழ்வாதாரம் கருதி வளர்ப்பவர்கள் உரிய சுகாதார முறையில் சூழலிற்குப் பாதிப்பில்லாமல் செயற்படுவார்கள் எனக் கண்டால் வளர்க்க அனுமதிக்கப்படும். ஆனால் உரித்து விற்பனையில் ஈடுபட முடியாது.

இதனை மாநகரத்தில் சகல கோழி வளர்ப்போருக்கும் தெரியப்படுத்தி ஒழுங்கமைக்க நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## வயோதிபரின் மூக்கில் இருந்து வெளியே 11 தேன் குளவிகளை எடுத்த டாக்டர்கள்

### பதுளை மருத்துவமனையில் சம்பவம்

தேன் குளவிக் கொட்டுக்கு இலக்காகி பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வயோதிபரொருவரின் மூக்கின் ஊடாக பதினொரு தேன் குளவிகளை, வைத்தியர்கள் வெளியில் எடுத்த சம்பவமொன்று நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

கலவுட பிரதேசவைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக தேன் குளவிகளின் கொட்டுக்கு இலக்கான 70 வயது நிரம்பிய வயோதிபர்,பதுளை அரசினர் மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டார்.



அந்நிலையில் அவ்வயோதிபர் தீவிரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு அவருக்கு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

அவ்வேளையில், அந் நபரின் மூக்கின் ஊடாகப் பதினொருகல் தேன் குளவிக்கள் வெளியில் எடுக்கப்பட்டன.

அத்துடன் நூற்றுக் கணக்கான தேன் குளவிகள் கொட்டியதினால், அவற்றால் அவரின் உடலில் விடப்பட்ட வெள்ளைநிற ஆணிகள் அந்நபரின் உடம்பெங்கும் இருந்தன.

அவற்றை டாக்டர்கள் ஒவ்வொன்றாக அகற்றினா்.

மூன்று விசேட வைத்திய நிபுணர்கள், ஆறு தாதிகள் இணைந்து இந்நபருக்குமூன்று மணித்தியாலங்களாக தீவிர சிகிச்சைகள் மேற்கொண்டனர் என பதுளை அரசினர் மருத்துவமனை விசேட வைத்திய நிபுணர் பாலித்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கலவுடையைச் சேர்ந்த சியதோரிஸ் என்ற 70 வயது நிரம்பிய நபர், மூலிகை மருந்தொன்றை எடுக்க வனப் பகுதிக்கு சென்றுள்ளார். அவ்வேளையில் மூலிகை மருந்தை எடுத்தபோதே, தேன் குளவிக் கூடொன்று கலைந்து, தேன் குளவிகள் அந் நபரைப் பதம் பார்த்தன என்று கூறப்பட்டது.

## கடுமையாகத் தாக்கிய அதிபருக்கு எதிராகப் பெற்றோர் போராட்டம்




### ஹட்டனில் நேற்றுச் சம்பவம்

ஹட்டன், ஓக.26

ஹட்டன் வெலிஓயா மலைமகள் வித்தியாலய அதிபருக்கு எதிராகப் பாடசாலைக்கு முன்னால்நேற்றுப்போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தரம் 11 இல் கல்வி பயிலும் மாணவரொருவரை கடுமையாகத் தாக்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அதிபரின் முறைகேடான நிர்வாகத்துக்கு எதிராகவுமே இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக மக்கள் தெரிவித்தனர்.

நீதி கோரி பெற்றோர் போராடுகையில் அவ்விடத்துக்குப் பொலிஸார் வந்தனர். இதனையடுத்து எழுத்துமூலம் அவர்கள் முறைப்பாட்டைப் பதிவு செய்தமையை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## ஜனாதிபதியின் பதவிக் காலம்

**அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் ஆளும் தரப்பில் இருந்து பல்வேறு உருட்டல், பிரட்டல் தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவை குறித்து மக்களுக்குச் சரியான தெளிவுபடுத்தல்கள் கொடுப்போர் எவருமில்லை.**

**19ஆவது திருத்தத்தில் கொண்டு வரப்படும் மாற்றங்கள் தொடர்பில் அரசுத் தரப்பில் சில பீற்றல்கள் தெரிவிக்கப்படுகின்றன. அவற்றில் ஒன்று – 19ஆவது திருத்தத்தில் உள்ள சில அம்சங்களை நாங்கள் மாற்றப் போவதில்லை, அவற்றைத் தொடரப் போகின்றோம் என்பதாகும்.**

**அவற்றில் ஒன்று ஜனாதிபதியின் பதவிக்காலம் பற்றிய விவகாரம்.**

**19ஆவது திருத்தம் கொண்டு வரப்படுவதற்கு முன்னர் ஜனாதிபதியின் பதவிக்காலம் ஆறு வருடங்களாகும்.**

**2015 ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கூட்டு எதிரணியின் பொது வேட்பாளராகக் களமிறங்கி வெற்றி பெற்றார் மைத்திரிபால சிறிசேன. அவர் அப்போது ஆறு ஆண்டு காலப் பதவிக்கே தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

**எனினும், அவரது அரசு 2015இல் 19ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்தது. அதன் மூலம் ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. அதனால் ஆறு ஆண்டுகள் பதவிக்காலத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மைத்திரிபால சிறிசேனவின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாக்கப்பட்டது. இல்லையேல் இப்போதும் மைத்திரிபால சிறிசேனதான் நாட்டின் ஜனாதிபதி. வரும் நவம்பர் – டிசெம்பர் மாதம் வரை அவர் பதவியில் தொடர்ந்திருக்க முடியும்.**

**ஆறு ஆண்டுகள் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டவரின் அந்தப் பதவிக் காலத்தைக் குறைக்கும் ஓர் அரசமைப்புத் திருத்தத்தை நாடாளுமன்றம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையால் நிறைவேற்றுவதற்கு உயர்நீதிமன்றம் அனுமதிக்க முடியும். அனுமதித்தது. அதுவும் அவ்விடயத்தை – அப்போது பதவியில் இருக்கும் ஜனாதிபதி, அதுவும் ஆறு ஆண்டு பதவிக் காலத்துக்கு மக்கள் ஆணை பெற்ற ஜனாதிபதி, ஆட்சேபிக்காமல் அதற்கு இணங்கிப் போன நிலையில், அதனை நீதிமன்றம் சர்ச்சைக்கு உட்படுத்தாமல் அனுமதித்தது. 19ஆவது திருத்தம் உயர்நீதிமன்ற வழிகாட்டல் படி மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டவுடன் நடைமுறைக்கு வந்தது.**

**ஆனால், ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் சில சூசகமான விடயங்கள் நமது அரசமைப்பில் உள்ளன. அவை கவனிக்கத்தக்கவை.**

**மூல – முந்தைய – ஏற்பாட்டின்படி ஜனாதிபதி ஒருவரின் பதவிக் காலம் ஆறு வருடங்களாகும். அந்த ஆறு வருடங்களுக்கு மேல் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை அதிகரிப்பதாயின் அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெறுவதுடன் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெறப்பட வேண்டும் என்று நமது அரசமைப்பு ஏற்பாடு தெளிவாகக் குறிப்பிடுகின்றது.**

**19ஆவது திருதத்தின் மூலம் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஐந்து வருடங்களாகக் குறைத்த நல்லாட்சி அரசினர், ஏனோ மேற்படி ஆறு ஆண்டுகளுக்கு மேல் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை அதிகரிப்பதாயின் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற ஷரத்தை மாற்றவில்லை. அதில் கைவைக்கவில்லை. அந்த ஷரத்தில் *'ஆறு ஆண்டுகள்'* என்பதை *'ஐந்து ஆண்டுகள்'* என்று மாற்றவில்லை.**

**இந்தக் காரணத்தினால் இப்போதும் கூட ஜனாதிபதியின் பதவிக் காலத்தை பழையபடி ஆறு ஆண்டுகளாக்கும் அரசமைப்புத் திருத்தத்தை – சர்வஜன வாக்கெடுப்பு நடத்ததாமல் – நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் இப்போதைய அரசினால் செய்ய முடியும். அதற்கு சட்டத்தடை ஏதும் வருவதற்கு வாய்ப்புக் குறைவு.**

**ஆனால், அப்படி சட்டத்தை மாற்றினாலும். அதனை இப்போது பதவியில் இருக்கும் ஜனாதிபதிக்கு – கோட்டாபய ராஜபக்ஷவுக்கு – பொருத்தமானதாக மாற்ற முடியுமா என்பதுதான் கேள்வி.**

**ஆறு ஆண்டுகளுக்கு மக்கள் ஆணை பெற்ற மைத்திரிபால சிறிசேன அதனை ஐந்து ஆண்டுகளாகக் குறைப்பதற்கு , அவரும் இணங்கிச் சென்றமையால் அதைச் செய்வதற்கு சட்டமோ, நீதிமன்றமோ தலையிடாமல் அனுமதித்தது.**

**ஆனால் கோட்டாபய விடயம் வேறு. அவர் ஐந்து ஆண்டுகள் பதவிக் காலத்துக்கே மக்கள் ஆணை பெற்றவர். அவரின் பதவிக் காலத்தை சட்டத்தை மாற்றுவதன் மூலம் – அரசமைப்பைத் திருத்துவதன் மூலம் – மேலதிகமாக ஓராண்டு நீடிக்க நீதிமன்றம் அனுமதிக்க மாட்டாது என்பதுதான் பலரினதும் கணிப்பு.**

**19ஆவது திருத்த ஏற்பாடுகளை ரத்துச் செய்கின்றோம் என்ற பெயரில் மீண்டும் ஜனாதிபதியின் பதவிக் காலத்தையும் ஆறு ஆண்டுகளாக்கும் ஷரத்தை புதிய இருபதாவது திருத்தத்தில் சேர்த்து, அதனை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி சட்டமாக்க முடியும்.**

**ஆனால் அந்த ஏற்பாடு தற்போது இருக்கும் ஜனாதிபதிக்கு பொருந்தி வராது. இனித் தேர்தல் மூலம் தெரிவாகும் அடுத்த ஜனாதிபதிக்கே பொருந்தும்.**

**அதனால்தான் ஜனாதிபதியின் இந்தப் பதவிக் கால விவகாரத்தை அப்படியே ஐந்து வருடங்களாகப் பேண கோட்டாபய அரசு முடிவு செய்திருக்கின்றது. அவ்வளவுதான்.**

# உள்ளூர் விவசாய பொருளாதாரத்தை வலுப்படுத்தவேண்டும் – ஜனாதிபதி



கொழும்பு, ஓக.26

வலுவான உள்ளூர் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக விவசாய விளைச்சலை அதிகரிக்கும் சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அத்துடன், கொவிட் தொற்றால் வீழ்ச்சியடைந்து வரும் ஏனைய நாடுகளின் பொருளாதாரங்களைக் கண்காணிப்பதன் முக்கியத்துவத்தையும், உள்ளூர் விவசாய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதையும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கு செய்கை மேம்பாடு மற்றும் விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஆண்டுக்கான உருளைக் கிழங்கு அறுவடை 80 ஆயிரம் தொன் ஆக காணப்படுகின்ற போதிலும், நுகர்வோர் தேவை 2 லட்சத்து 50 ஆயிரம் தொன் ஆகக் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், உருளைக்கிழங்கை இறக்குமதி செய்யாது உள்ளூர் தேவையைப் பூர்த்தி செய்ய விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

விவசாய அமைச்சர் மகிந்தானந்த அலுத்கமகே, இராஜாங்க அமைச்சர் சசிந்திர ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர மற்றும் உரிய அதிகாரிகளும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

# வடக்கில் 5,572 பட்டதாரிகள் விண்ணப்பம் 3,109 பேருக்கு அரச நியமனம் கிடைக்கும்

## 2,346 விண்ணப்பக்கள் நிராகரிப்பு; 117 நிலுவையில்

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம்,ஓக.26

ஐம்பதாயிரம் பட்டதாரி நியமனங்களுக்காக வடக்கிலிருந்து 5,572 பட்டதாரிகள் விண்ணப்பித்திருந்த நிலையில் அவர்களில் 3,109 பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் ஏற் றுக்கொள்ளப்பட்டுள்ளன. 2,346 பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 117 பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளன.

### யாழ்ப்பாணம்

யாழ் மாவட்டத்தில் இருந்து 3,460 பட்டதாரிகள் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் 1,897 பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. 1506 பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அதுபோல் 57 பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளன.

### கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 413 பட்டதாரிகள் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் 267 பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன. 127 பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அதுபோல் 19 பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் நிலுவையில் வைக்கப்பட் டுள்ளன.

### முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து 344 பட்டதாரிகள் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் 233 பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. 101 பட்ட தாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட் டுள்ளன. அதுபோல் 10பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளன.

### வவுனியா

வவுனியா மாவட்டத்தில் இருந்து 658 பட்டதாரிகள் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் 338 பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன. 256 பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அதுபோல் 19 பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளன.

### மன்னார்

மன்னார் மாவட்டத்தில் இருந்து 697 பட்டதாரிகள் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் 329 பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. 356 பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அதுபோல் 12 பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளன.

### தேசிய ரீதியில்

ஐம்பதாயிரம் பட்டதாரி நியமனங்களுக்காக நாடு முழுவதும் 90,129 பேர் விண்ணப் பித்திருந்த நிலையில் 49,050 பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. 40,092 பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. 987 பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# நீண்டகாலத் திட்டத்தின் அடிப்படையிலேயே அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர் - பிரசன்ன

கொழும்பு, ஓக.26

பொருத்தமானதும் நீண்ட காலத் திட்டத்தின் அடிப்படையிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இராஜாங்க அமைச்சுக்களை ஒதுக்கியுள் ளார் என அமைச்சர் பிரசன்ன ரண துங்க குறிப்பிட்டுள்ளார்.

கம்பஹாவில் நேற்று (செவ்வாய்க் கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப் பில் பேசிய அவர், தேசியவாதத்தின் மதிப்பை அறியாத சில குழுக்களே புதிய அமைச்சரவை குறித்து விமர்சிக்கின்றன எனவும் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் நீண்டகால திட் டத்தை வகுக்கவும் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என பிரசன்ன ரணதுங்க சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக நடைபெற்ற மக்கள் சந்திப்புகளின்போது, மட்பாண்ட கைத்தொழில் மற்றும் பிற உள்ளூர் கைத்தொழில் உற்பத்திகளை அபிவிருத்தி செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுத்திருந் தனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவேதான் உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துவதற்காக, ஜனாதிபதி, அமைச்சர்களுக்கான பதவிகளை அதன்படி ஒதுக்கியதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

# விக்கியின் நாடாளுமன்ற உரை புலம்பெயர்ந்தோருக்கானதாம்!



## அமைச்சர் சஷிந்திர ராஜபக்ஷ

சி.வி.விக்னேஸ்வரனின் கருத்து தொடர்பில் அடுத்த நாடாளுமன்ற அமர்வில் எதிர்ப்பை வெளிப்படுத்த எதிர்பார்த்துள் ளதாக இராஜாங்க அமைச்சர் சஷிந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடமாகாணநாடாளுமன்றஉறுப்பினர் விக்னேஸ்வரன், நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

9 ஆவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வில் விக்னேஸ்வரன் ஆற்றிய உரையானது இந்த நாட்டிலுள்ளவர்களுக் கானதல்ல. மாறாக, புலம்பெயர்ந்துள்ளோருக்குஆற்றிய உரையாகும்.ஆகவே,அதுதொடர்பாக குழப்பமடையத் தேவையில்லை.

“மேலும், விக்னேஸ்வரன் கூறியதுபோன்றுவட,கிழக்குமக்களுக்குத் தேவையானது இதுவல்ல. ஆகவே, விக்னேஸ் வரனின் கருத்து தொடர்பில் அடுத்த நாடாளுமன்ற அமர்வில் எதிர்ப்பை வெளியிப்படுத்த எதிர்பார்த்துள்ளோம்” – என்றார்.

## பண்டாரவன்னியனின் வெற்றி நாள் நினைவு தினம் யாழில் அனுஷ்டிப்பு





*பண்டாரவன்னியனின் வெற்றி நாள் நினைவு தினம் நேற்று காலை 10.30 மணியவில் யாழ்ப்பாணத்தில் தமிழ் தேசிய கட்சியின் ஏற்பாட்டில் அனுஷ்டிக்கப்பட்டது.*

*யாழ்ப்பாணம் மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகில் உள்ள அம்மன்னனின் உருவச் சிலை யடியிலேயே மேற்படி நிகழ்வு நடந்தது.*

*அங்குள்ள உருவச்சிலைக்கு முன்பாக அம் மன்னனின் உருவப்படம் வைக்கப்பட்டு, அதற் கும் உருவச்சிலைக்கும் மாலை அணிவித்தும், மலர்களை தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.*

*இந்நிகழ்வில் முன்னாள் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*

## பண்டாரவன்னியனின் வெற்றி நினைவு தினம் வவுனியாவில் கலை,கலாசார நிகழ்வுகளுடன்

வன்னி இராச்சியத்தின் இறுதி மன்னன் பண்டார வன்னியனின் 217ஆவது வருட வெற்றி நினைவு நாள் நிகழ்வு வவுனியாவில் நினைவுகூரப்பட்டது.

வவுனியா நகரசபை தலைவர் இ.கௌதமன் தலை மையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இந்த நிகழ்வு இடம்பெற்றது.

வவுனியா நகரசபையும், பண்டாரவன்னியன் விழாக்குழுவும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

காலை 8.15மணிக்கு வவுனியா மாவட்ட செயலக முன்றிலில் அமைந்துள்ள பண்டாரவன்னியனின் நினைவுத்தூபிக்கு, ஜனாதிபதியும் சட்டத்தரணியும் அவரது சிலை மாவட்ட செயலகத்தில் அமைவதற்கு காரணமாக இருந்தவருமான மு.சிற்றம்பலம் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.







அதனைத் தொடர்ந்து வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர், நகரசபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்பினர் , வர்த்தக சங்கத்தினர் , முச்சக்கரவண்டி உரிமையாளர்சங்கத்தினர்,பொதுமக்கள்சிலைக்கு மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தினர்.

அதன் பின்னர் தமிழருவி சிவகுமாரினால் நினைவுரையும் நிகழ்த்தப்பட்டது.

இதனையடுத்து காலை 9.30 மணியளவில் வவுனியா நகரசபை மண்டபத்தில் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

வன்னி இராச்சியத்தின் இறுதி மன்னனான பண் டார வன்னியன் இலங்கையில் பிரித்தானிய கொலனித் துவத்தை எதிர்த்துப் போராடி மடிந்தவராவார்.

இவரின் திறமை மிகவும் வியக்கத்தக்க வகையில் இருந்தது என 1782இல் லூயி என்கிற டச்சு ஆட்சியாளர் ஒருவர் எழுதிய நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இத்தகைய மாபெரும் வீரத்தை இந்த மாவீர மன்னனை தவிர்த்து உலகில் வேறொரு அரசனிடமும் கண்டதில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை இவரின் வீரத்திற்கு சான்றாகும். (உ – 100)

## யாழில் சில பகுதிகளில் பியர் பாவனை வீழ்ச்சி!

யாழ்ப்பாண மதுவரித் திணைக்களத்தின் ஆளுகைக் குட்பட்ட யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை ஆகிய பகுதிகளில் கடந்த 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இவ்வருடம் கடந்த 6 மாதம் வரையிலான புள்ளிவிவரங்களின்படி பியர் நுகர்வு 27 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக யாழ்ப்பாண மதுவரி திணைக்கள புள்ளிவிவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2019 ஆம் ஆண்டு 21லட்சத்துக்கு மேற்பட்ட லீட்டர் பியர் விற்பனை இடம்பெற்றதாகவும், எனினும் இவ்வருடம் கடந்த 6 மாத புள்ளிவிவரங்களின்படி 7 இலட்சத்து 42 ஆயிரம் லீட்டர் பியர் நுகர்வு மட்டுமே இடம்பெற்றுள்ளதாகவும் யாழ்ப்பாண மதுவரி திணைக்கள புள்ளிவிபர தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்தோடு வைன் நுகர்வு கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 21 வீதத்தால் குறைவடைந்துள்ளது. அதேபோல் வெளிநாட்டு சாராய நுகர்வும் 1.74 வீதத்தால் குறைவடைந்துள்ளது. மேலும் உள்ளூர் சாராய பாவனை 2.6 வீதமாக அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை ஆகிய பகுதிகளில் யாழ்ப்பாண மதுவரித் திணைக்களத்தின் ஆளுகையின் கீழ் 13 சில்லறை மதுபான விற்பனை நிலையங்களும், 5 ஹோட்டல் விற்பனை நிலையங்களும், 6 விடுதி விற்பனை நிலையங்களும் காணப்படுகின்றன. இங்கு கடந்த வருடத்தோடு ஒப்பிடும் போது இவ்வருடத்தில் கடந்த 6 மாதம் வரையிலான புள்ளிவிபரங்களின்படி பியர் பாவனை குறைவடைந்து உள்ளதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

## நுரைச்சோலை மின்நிலைய இரண்டாவது பிறப்பாக்கியின் செயற்பாடுகள் ஆரம்பம்!



நுரைச்சோலை லக்விஜய மின் நிலையத்தின் இரண்டாவது மின் பிறப்பாக்கி இயந்திரம் நேற்று அதிகாலை தொடக்கம் மின் உற்பத்தியை ஆரம்பித்ததாக மின் நிலையத்தின் முகாமையாளர் இந்திர கால்லகே தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் 60 மெகாவோட் மின்சாரம் தேசிய மின்சாரக் கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளது. ஏனைய மின் பிறப்பாக்கி இயந்திரங்களையும் துரிதமாக செயற்படுத்த பொறியியலாளர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

இதேவேளை, நாடு பூராகவும் இடம்பெற்ற மின்சார துண்டிப்பு பற்றி ஆராய்வதற்கென நியமிக்கப்பட்ட குழுவின் இடைக்கால அறிக்கை அமைச்சர் டலஸ் அழகப்பெருமவிடம் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனாவால் தடைப்பட்டிருந்த யாழ் மாவட்ட அபிவிருத்தி பணிகள் இனித் துரித கதியில் நடைபெறும்

## யாழ். அரச அதிபர் நம்பிக்கை

கொரோனா பரவலால் தடைப்பட்டிருந்த யாழ் மாவட்ட அபிவிருத்தி பணிகள் தற்போது துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்

யாழ் மாவட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:-

யாழ் மாவட்டத்தில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி திட்டங்களில் இரு பிரதான திட்டங்கள் அரசினாலும் மற்றுமொரு ஒரு திட்டம் உலக வங்கியின் நிதிப்பங்களிப்பிலும் முன்னெடுக்கப்படுகின்றன.

இதனைவிட எதிர்வரும் நாள்களில் மேலும் பல திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

சப்ரிகம செயற்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 435 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் இருபது லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவற்றுக்கு மேலதிகமாக மக்களால் இனங்காணப்பட்ட சுமார் 690 திட்டங்கள் ஏற்கனவே கடந்த நாடாளுமன்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டு இவ் வருடம் 2020ல் நடைமுறைப்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டங்களுக்குமான மொத்த மதிப்பீடு 87 கோடி ரூபா ஆகும்.

இந்த திட்டத்தினை கொரோனா காலப்பகுதிக்கு முன்னர் தொடங்கியிருந்தாலும் அதன் பிற்பாடு அந்த வேலைகள் முற்றாக முடிவுறுத்தப்படவில்லை. எனினும் 573 வேலைகள் முடிவுற்றுள்ளன. இதற்கென 24 கோடி ஐம்பது லட்சம் ரூபா தற்போது வரை செலவிடப்பட்டுள்ளது

மிகுதி வேலைகளை இந்த வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யக்கூடியவாறு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன

அதேபோல. "கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 57 திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றுக்கான நிதி ஒதுக்கீடு 2 கோடி 12 லட்சம் ரூபா ஆகும். இந்த 57 திட்டங்களில் தற்போது 46 திட்டங்கள் பூரணப் படுத்தப்பட்டுள்ளன. இதற்கென ஒரு கோடி 60 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இத் திட்டம் பெரும்பாலும் இவ் வருட இறுதிக்குள் பூரணப்படுத்தப்படும்.

மேலும் கொரோனாத் தொற்று மற்றும் நிலைமாறுகால பகுதியில் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படாமை போன்ற காரணத்தால் திட்டங்களை சீராக நடத்துவதில் சிறு தடங்கல் ஏற்பட்டிருந்தது. இருந்த போதிலும் மிகுதி நான்குமாத காலப்பகுதிக்குள் இந்த திட்டத்தை முடிவுறுத்துவதற்கான ஏற்பாடுகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

இதனைவிட தந்திரோபாய நகர அபிவிருத்தி திட்டம் உள்ளது. இது உலக வங்கியின் நிதியீட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்றது. இத்திட்டத்தில் யாழ் நகரப் பகுதி உள்வாங்கப்பட்டு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை 701 கோடி முப்பது லட்சம் ரூபா ஆகும். இத் திட்டமானது நான்கு பிரதான வகையாக முன்னெடுக்கப்படுகிறது.



1. வீதி0 போக்குவரத்து முகாமைத்துவமும் பொதுப் போக்குவரத்துக் கட்டமைப்பு வசதியினை மேம்படுத்தலும்.
2. வடிகாலமைப்பு தொகுதிகளை மேம்படுத்தல்.
3. நகரதரமுயர்த்தல் அதேபோன்று கலாச்சார பாரம்பரியம் மிக்க இடங்களை பேணிப் பாதுகாத்தல்.
4. யாழ்ப்பாண மாநகர சபையினை வலுப்படுத்தல்.

- இந்த நான்கு கட்டங்களாக இந்த தந்திரோபாய நகர திட்டமானது யாழ் நகரத்தில் அமுல்படுத்தப்படவுள்ளது.

வீதி போக்குவரத்து முகாமைத்துவம் என்ற வகையிலே தற்பொழுது யாழ் நகரத்தை இணைக்கின்ற வகையிலே கச்சாய் - கொடிகாமம் - புலோலி வீதி, யாழ்ப்பாணம் - பொன்னாலை வீதி ஆகியன புனரமைப்பு செய்யப்படுகின்றன. இதனைவிட பொதுப் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து முகாமைத்துவம் தொடர்பான ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வின் முடிவுகள் யாழ் மாநகரசபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு யாழ் நகரப் பகுதியில் வீதிப் போக்குவரத்து மற்றும் ஏனைய திட்டங்கள் தொடர்பில் ஆராயப்படும்.

இதனைவிட நகர மையத்தில் கலாசார பாரம்பரியம் மிக்க இடங்களைப் பேணிப் பாதுகாத்தல் என்ற திட்டத்தின் கீழ் பழைய கச்சேரி மற்றும் பழைய பூங்கா என்பன புனரமைப்பு செய்யப்படவுள்ளன. அவற்றை அபிவிருத்தி செய்து நவீன மயப்படுத்திப் பேணுவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் நகர வீதிகளில் நடைபாதை, சைக்கிள் பாதை போன்றவை உள்ளடக்கப்பட்டு நகர மக்கள் பயன்படுத்த கூடிய திட்டமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதனைவிட 3 பிரதானமான பூங்காக்களும், 6 சிறு பூங்காக்களும் நகரத்தை மையமாகக் கொண்டு அமைக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாண நகரினை பொறுத்தவரை பிரதானமாக தேவைப்படுவது வாகனத் தரிப்பிடமாகும். நகரப் பகுதியில் வாகன தரிப்பிடம் என்பது மிகவும் கஷ்டமான ஒரு விடயமாக காணப்படுகின்றது. அதனைப் பாதுகாப்பான இடமாக அமைப்பதற்குரிய முன்மொழிவு பொது பயன்பாட்டு வாகன தரிப்பிடம் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படவுள்ளது. அதனைவிட பொது வசதிகள் ஏற்படுத்துவதற்கும் திட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன

தந்திரோபாய நகர அபிவிருத்தி திட்டம் தற்பொழுது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதனை அடுத்த வருட இறுதிக்குள் நிறைவு செய்ய எதிர்பார்த்திருந்தோம். எனினும் கொரோனாத் தொற்று நெருக்கடி காரணமாக திட்டமிட்ட காலத்திற்குள் அதனைச் செயற்படுத்த முடியாது போய் விட்டது. எனினும் மிகத் துரிதமாக அவற்றை நடைமுறைப்படுத்தி மிகுதி வேலைகளை குறித்த காலப் பகுதிக்குள் நிறைவு செய்வதற்குரியவாறு மீளாய்வுக் கூட்டங்களை நடத்தி அவற்றை இயலுமானவரை நிறைவு செய்வதற்குரிய பணிகளை முன்னெடுத்துள்ளோம். - என்றார்.

# 13ஆம் திருத்தத்தை நீக்க இடமளியோம்!

## இராதாகிருஷ்ணன் உறுதி

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற ஆளுங்கட்சிஉறுப்பினர்களின்கருத்தை ஏற்கமுடியாது. அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே தமிழ் முற்போக்கு கூட்டணியின் நிலைப்பாடாகும் என்று கூட்டணியின் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளின் இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே இலங்கையில் மாகாண சபை முறைமையை உருவாக்குவதற்காக 13ஆவது திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. எனவே, இது விடயத்தில் இலங்கையில் தன்னிச்சையாக செயற்படமுடியாது. குறிப்பாக இந்தியாவை பகைத்துக்கொண்டு இதனை நீக்கினால் நெருக்கடிகள் ஏற்படக்கூடும்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கும்போது '13 பிளஸ்' எனக் கூறினார். இன்று கூட அவரோ அல்லது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவோ 13 ஐ நீக்குவது தொடர்பில் கருத்து வெளியிடவில்லை. தமது வாக்கு வங்கியை அதிகரித்துக் கொள்வதற்காகவே 13 நீக்கப்படவேண்டும் என சிலர் வலியுறுத்திவருகின்றனர். இதற்கு நாம் இடமளிக்கமாட்டோம்.



வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல நாட்டில் ஏனைய 7 மாகாணங்களிலும் மாகாண சபைகள் இயங்கின. முதல்வர்கள் தெரிவானார்கள். எனவே, மாகாணசபை முறைமையை பலப்படுத்தவேண்டுமே தவிர அதனை பலவீனப்படுத்தக்கூடாது. எவ்வித அதிகார குறைப்பும் இன்றி 13 முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே தமிழ் முற்போக்கு கூட்டணியின் நிலைப்பாடாகும்.

தமிழ் முற்போக்கு கூட்டணியில் மூன்று கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. இம்மூன்றுகட்சிகளும்இணைந்து பயணித்தமையாலேயே எமக்கான பிரதிநிதித்துவத்தை பாதுகாத்துக் கொள்ளக்கூடியதாக இருந்து. எனவே, வடக்கு, கிழக்கிலுள்ளதமிழ்கட்சிகளும்இணைந்து செயற்படவேண்டும். - என்றார்.

# புகையிலை பாவனைக்கு இலங்கையில் தடை!

*இலங்கையில் புகையிலை சார்ந்த பொருள்கள் விற்பனை, காட்சிப்படுத்தல் மற்றும் பொதுப் பயன்பாடு ஆகியவற்றுக்கு முற்றிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது.*

*மருந்துகள், புகையிலை மற்றும் ஆல்க ஹால் தடுப்புக்கான புதிய செயற்திட்டத்தை உருவாக்கும் பயிற்சி திட்டத்தில் நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) உரையாற்றும்போதே புகையிலைமற்றும்ஆல்கஹால்தொடர்பான தேசிய அதிகாரசபையின் தலைவர், மருத்துவர் சமாதி ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.*

*புகையிலைநிக்கொட்டீனா என்னும் பேரினத்தைச் சேர்ந்த தாவரத்தின் இலைகளிலிருந்து செய்யப்படுகின்றது. மிகப் பழங்காலம் தொட்டே இது அமெரிக்கக் கண்டத்தில் பயன்பட்டு வந்துள்ளது.*

*ஐரோப்பியர்கள் அமெரிக்காவுக்கு வந்ததிலிருந்து இது ஒரு வணிகப் பண்டம் ஆனதுடன், பொழுதுபோக்குத் தேவைகளுக்கான ஒரு பொருளாகவும் பிரபலமானது.*

*இதனை இலங்கை மக்களும் வெற்றிலை பாக்குடன் இணைத்து உண்பதுடன் புகைத்தலுக்கும் பயன் படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.*

# அனைவரதும் ஆலோசனைகளுடனும் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும்!

## என்கிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ



புதிய அரசமைப்பொன்றை ஸ்தாபிக்க, கட்சி பேதங்களைக் கடந்து அனைவரது ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்படும் என இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான விசேட செயலமர்விலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்– 50 வருடங்களுக்கு முன்னர், நாமும் இதேபோன்று ஒரு செயலமர்வில் இளைய நாடாளுமன்ற உறுப்பினர்களாகக் கலந்துகொண்டிருந்தமை எனக்கு நினைவுக்கு வருகிறது.

இது ஒரு நடைமுறையாக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது ஒரு வரலாறாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நாடாளுமன்றை பற்றி தெரிந்துகொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும்.

இதுதொடர்பான புரிந்துணர்வை நாடாளுமன்றுக்கு உள்ளேதான் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த புரிந்துணர்வுதான் உறுப்பினர்களை முன்னோக்கி பயணிக்க வழிவகை செய்யும். புதிய உறுப்பினர்கள் பலர் இன்று நாடாளுமன்றுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். புதியவர்கள் வருகின்றமையை நாம் மகிழ்ச்சிகரமாக வரவேற்கின்றோம். இவர்கள் தான் நாட்டின் எதிர்கால தலைவர்களாக வரப்போகிறார்கள்.

கடந்த தேர்தலை யாரும் மறந்துவிடப்போவதில்லை. எமது தரப்புக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்ததோ அல்லது இலங்கையின் பழைய கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஓர் ஆசனம்கூட கிடைக்காததோ இங்கு விசேடமானது அல்ல.

ஆனால், இந்த தேர்தல் ஊடாக ஒரு பாடத்தை மக்கள் எமக்குக் கற்பித்துள்ளார்கள் என்பது மட்டும் உண்மையாகும்.

71 வீதமான மக்கள் வாக்களித்துள்ளார்கள். இது எதிர்காலத்திற்கு விடுக்கப்பட்ட ஒரு சமிக்ஞையாகவே நாம் கருதுகிறோம்.

நாட்டு மக்கள், ஜனநாயகத்திற்கும் முறையான வேலைத்திட்டத்திற்கும் ஆதரவானவர்கள் என்பதை காண்பித்துள்ளார்கள். வேலை செய்யாதவர்களை வீட்டுக்கு அனுப்பியுள்ளார்கள். நாட்டுக்கு ஆதரவில்லாதவர்களை நிராகரித்துள்ளார்கள்.

இதேபோன்றுதான் மக்கள் எதிர்காலத்திலும் செயற்படுவார்கள் என்று நாம் கருதுகிறோம். பெரியவர் – சிறியவர் என்று பார்க்காமல், புதியவரா – அனுபவசாலியா என்று பார்க்காமல், மக்கள் தீர்ப்பு வழங்கியுள்ளார்கள்.

மக்களை பொறுத்தவரை, மக்களுக்கான சேவை செய்யத் தகுதியற்றவர்களை, அவர்கள் நிராகரிப்பார்கள் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

இதுதான் மக்களுக்கான அரசியல். நாம் என்றும் மக்களுடன் தொடர்பில் இருக்க வேண்டும். இதனை புதிய உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும்.

நாடாளுமன்றை பொறுத்தவரை, உறுப்பினர்கள் அனைவரும் சிறந்த மக்கள் பிரதிநிதியாக இருக்க வேண்டும். இதனை புறக்கணிப்பவர்களுக்கு அரசியல் எதிர்காலமொன்று இருக்காது.

எமக்கு அரசியல் பழிவாங்கலில் ஈடுபட தற்போது நேரமில்லை. இதற்காக மக்கள் எமக்கு ஆணையும் வழங்கவில்லை.

நாட்டுக்கு புதிய அரசமைப்பொன்றை ஸ்தாபிக்கவே மக்கள், இந்தத் தேர்தலில் எமக்கு ஆணை வழங்கியுள்ளார்கள்.

எனவே, இதனை நாம் முதலில் நிறைவேற்ற வேண்டும். அரசமைப்பு என்பது ஒரு தரப்புக்கு மட்டும் உரித்தானது அல்ல. உண்மையில் இதன் ஒவ்வொரு சரத்தும், எமது வாழ்க்கையைத் தீர்மானிக்கும்.

எனவே, இதற்கு அனைத்துத் தரப்பினரின் ஒத்துழைப்பும், கட்சி பேதங்களைக் கடந்து தேவைப்படுவது எமது அரசியல் பொறுப்பாக உள்ளது. இதுதான் மக்களின் எதிர்பார்ப்பாகும் – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# விமான நிலையங்களை மீண்டும் திறப்பதற்கு பரிந்துரைக்குக் காத்திருக்கும் அதிகாரிகள்

கொழும்பு, ஒக. 26

இலங்கையில் உள்ள சர்வதேச விமான நிலையங்களை மீண்டும் திறப்பதற்கு சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்காகக் காத்திருக்கிறது சிவில் விமான சேவை அதிகார சபை.

இந்நிலையில் விமான நிலையங்களை மீண்டும் திறப்பதற்கு தற்காலிக திகதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை என சிவில் விமான சேவை அதிகார சபையின் தலைவர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

விமான நிலையங்கள் மீண்டும் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்குச் செல்ல அனுமதிக்கும் நாடுகளின் பட்டியலும் இன்னும் தொகுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இலங்கையில் உள்ள அனைத்து விமான நிலையங்களும் கடந்த மார்ச் மாதம் முதல் தற்காலிகமாக மூடப்பட்டன.

இதனை அடுத்து ஓகஸ்ட் மாதத்தில் விமான நிலையங்கள் மீண்டும் திறக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்திருந்தபோதும் இந்த நடவடிக்கையை மேலும் தாமதப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருந்ததாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க முன்னர் அறிவித்திருந்தார்.

அத்தோடு தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களின் பற்றாக்குறையால் வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் பணிகளும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

இருப்பினும் அந்த நடவடிக்கை தற்போது மீண்டும் தொடங்கியபோதும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு இன்னும் நாட்டுக்குள் வருவதற்கான அனுமதி வழங்கப்படவில்லை.

இந்நிலையில் சுற்றுலாப் பயணிகளுக்காக விமான நிலையங்களை மீண்டும் திறக்க அரசாங்கம் தொடர்ந்தும் கலந்துரையாடி வருகிறது, ஆனால் அதற்கான திகதி இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழில் ஹெரோயினுடன் கைதானவர்களை விசாரிக்க உத்தரவு!

*யாழ்ப்பாணம் மாநகரில் உயிர்க்கொல்லி போதைப் பொருளான ஹெரோயினை விற்பனை செய்யும் முகவர் மற்றும் அவரது உதவியாளர் இருவரையும் வரும் ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிவரை தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதியளித்தது.*

*யாழ்ப்பாணம் பொம்மைவெளிப் பிரதேசத்தில் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனை இடம் பெறுவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை அந்தப் பகுதியில் தேடுதல் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது போதைப் பொருள் விநியோகிக்கும் இருவர் கைது செய்யப்பட்டனர்.*

*யாழ்ப்பாணம் பொம்மைவெளியைச் சேர்ந்த புலேந்திரன் கௌரிகரன் அல்லது வசந்தன் என்ற ஹெரோயின் போதைப் பொருள் முகவரிடமிருந்து 56 கிராம் 968 மில்லிக்கிராம் போதைப்பொருளும் கொக்குவிலைச் சேர்ந்த புலேந்திரன் மனோஜிடமிருந்து 9 கிராம் 656 மில்லிக் கிராம் போதைப் பொருளும் மீட்கப்பட்டது.*

*அவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) மாலை முற்படுத்தப்பட்டனர்.*

*சந்தேக நபர்கள் இருவருக்கும் வெவ்வேறு வழக்குகளைத் தாக்கல் செய்த யாழ்ப்பாணப் பொலிஸார், அவர்கள் இருவரும் தடுத்துவைத்து விசாரிக்க அனுமதி கோரி மன்றில் விண்ணப்பம் செய்தனர். வழக்கை ஆராய்ந்த நீதிவான், சந்தேக நபர்கள் இரு வரையும் வரும் ஓகஸ்ட் 31ஆம் திகதிவரை பொலிஸ் காவலில் தடுத்துவைத்து விசாரிக்க அனுமதியளித்தார்.*

# இலங்கையில் கொரோனா ஆபத்து நீங்கிவிட்டது எனக் கருதக்கூடாது

## இராணுவத் தளபதி சவேந்திர சில்வா எச்சரிக்கை



கொரோனா வைரஸ் தொற்று சமூகப் பரவலாக மாறாத போதிலும் இலங்கையில் கொரோனா ஆபத்து நீங்கிவிட்டது என கருதக்கூடாது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

எனவே கொரோனா வைரஸ் குறித்து மக்களை தொடர்ந்தும் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் ஆபத்து முற்றாக நீங்கிவிட்டது எனக் கருதி மக்கள் கொரோனா வைரஸ் தொடர்பான தங்கள் எச்சரிக்கை நடவடிக்கைகளைத் தளர்த்தக்கூடாது எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் நோயாளிகள் அனைவரும் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் எனத் தெரிவித்த இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, வெளிநாட்டிலிருந்து அழைத்து வரப்படுபவர்களில் சிலர் கொரோனா வைரஸினால் பாதிக்கப்படும் நிலை காணப்படுகின்ற போதிலும் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களை அழைத்து வருவதை தொடர்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும், ஆபத்து நீங்கிவிட்டது என கருதக் கூடாது எனவும் இராணுவத்தளபதி மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவின் அனுமதியின்றி '13' ஐ இலகுவில் இரத்துச்செய்ய முடியாது!

## அமைச்சர் வாசுதேவ எச்சரிக்கையுடன் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஓகஸ்ட் 25

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை இலகுவில் இரத்துச் செய்ய முடி யாது. இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையிலேயே 13 ஆவது திருத்தம் இந்தியாவின் தலையீட்டால் உருவாக்கிக் கொள்ளப்பட்டது. இலங்கையின் நட்பு மற்றும் நேச நாடாக இந்தியா காணப்படுகின்றது. ஆகவே, இவ்விடயத்தை இந்தியா கூர்ந்து கவனிக்கும்.

- இவ்வாறு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் இரத்துச் செய்யப்படுவதுடன் 13ஆவது திருத்தமும் இரத்துச் செய்யப்பட வேண்டும் என அரச தரப்பில் குறிப்பிடப்படுகின்றது. 13ஆவது திருத்தத்தின் நோக்கம் மாகாணசபைத்தேர்தலில்தங்கியுள்ளது.

மாகாண சபைகள் இல்லாமல் மாகாணங்களின் நிர்வாகம் ஜனாதிபதியின் பிரதிநிதிகளான ஆளுநர்களினால் முன்னெடுக்கப்படுவதால் மாகாண சபை முறை மையை முழுமையாக இல்லாதொழிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்படுகின்றது.

அரசமைப்பின்19ஆவதுதிருத்தத்தை இலகுவில் இரத்துச் செய்யலாம். ஆனால், 13ஆவது திருத்தத்தை இலகுவில் இரத்துச் செய்ய முடியாது. இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாகவே அரசமைப்பின் 13ஆவது திருத்தம் இந் நியாவின் தலையீட்டால் உருவாக்கிக் கொள்ளப்பட்டது. இலங்கையின் நட்பு மற்றும் நேச நாடாக இந்தியா காணப்படுகின்றது. ஆகவே, இவ் விடயத்தை இந்தியா கூர்ந்து கவனிக்கும்.

மாகாண சபைத் தேர்தல் உரிய காலத்தில் இடம்பெற்றிருந்தால், அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் குறித்து மாறுபட்ட கருத்துக்கள் தற்போது எழுந்திருக்காது. நல்லாட்சி அரசு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தோல்வியடைந்ததையடுத்து உரிய காலத்தில் இடம்பெற இருந்த மாகாண சபைத் தேர்தலைப் பிற்போட்டது. இதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழு ஆதரவு வழங்கியது - என்றார்.

## ரஞ்சனின் வழக்கு நிறைவு; ஒக். 21 இல் இறுதி வாய்ப்பு

கொழும்பு, ஓக 25

நீதிமன்றத்தை அவமதித்தமை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை நிறைவுக்கு வந்துள்ளது.

உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகளான சிசிர டி அப்ரூ, விஜித் மலல்கொட, பிரீத்தி பத்மன் சூரசேன ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாமின் முன்னிலையில் இன்று முன்னெடுக்கப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து, குறித்த வழக்கு விசாரணை நிறைவுக்கு வந்தது.

இந்த வழக்குத் தொடர்பில் மேலதிக தெளிவுபடுத்தலை முன்வைக்க இரு தரப்பினருக்கும் எதிர்வரும் ஒக்டோபர் 21ஆம் திகதி வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என நீதிமன்றம் இதன்போது அறிவித்தது.

கடந்த 2018ஆம் ஆண்டு ஓகஸ்ட் 21ஆம் திகதி இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில், இந் நாட்டிலுள்ளநீதிபதிகள்மற்றும்சட்டத்தரணிகளில்பெரும் பாலானோர் ஊழல்வாதிகளாக உள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

அவரது கருத்தின் மூலம் நாட்டின் நீதித்துறை மீதான நம்பிக்கை சீர்குலைந்து விட்டது எனத் தெரிவித்து, மாகல்கந்தே சுதத்த தேரர் மற்றும் விமானப்படையின் ஓய்வுபெற்ற அதிகாரியொருவர் ஆகியோரால் உயர் நீதிமன்றத்தில் நீதிமன்றம் அவமதிக்கப்பட்டுள்ளது என குற்றஞ்சாட்டி மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதற்கமைய சட்டமா அதிபரால், நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## 35 இராஜாங்க அமைச்சுகளுக்கும் நியமிக்கப்பட்டனர் செயலாளர்கள்

### ஒருவர் மட்டுமே தமிழர்

கொழும்பு, ஓக 25

கடந்த ஓகஸ்ட் 12ஆம் திகதி நியமிக்கப்பட்ட 35 இராஜாங்க அமைச்சுகளுக்கும் புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் அமைச்சரவைச் செயலாளர் டப்ளியூ.எம்.டீ.ஜே. பெனாண்டோவினால் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், அமைச்சரவையால் இந்த நியமனங்களை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய செயலாளர்களில் ஒருவர் மட்டுமே தமிழராவார். வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தைப் பல் வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் செயலாளராக எஸ். அருமைநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி சந்தையில் 38 கடைகள் திங்களிரவு சீல்

### வியாபாரிகள் போராட்டம்

கிளிநொச்சி, ஓக 25

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குள் உள்ள சேவைச் சந்தையில் நேற்றிரவு 8 மணிக்கு பின்னர் 38 மரக்கறிக் கடைகளுக்கு கரைச்சி பிரதேச சபையி னரால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச சபையின் செயலாளரின் ஒப்பத்துடன் 38 வியாபார நிலையங்களுக்கு முன்பாகவும் கடைகள் பூட்டப்பட்டுள்ளன என அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது.

இதனை எதிர்த்து வியாபாரிகள் நேற்றுக் காலை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி சந்தையில் உள்ள மரக்கறி வியாபாரிகள் 48 பேருக்கும் கூட்டம் ஒன்று நேற்று திங்கட்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு கரைச்சி பிரதேச சபையின் தவிசாளரால் ஏற்பாடு செய்யப்பட்டது. இதனை அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கே வாய்மொழி மூலம் சந்தைக் காப்பாளர் ஊடாக அறிவித்துள்ளனர்.

திடீரென அறிவிக்கப்பட்டதால் அந்தக் கூட்டத்துக்கு 38 வியாபாரிகள் செல்ல வில்லை. அதனால் கோபமடைந்த தவிசாளர் சேவைச் சந்தையின் வர்த்தகர் சங்கத்தலைவர் முன்னிலையில் சபை யின் செயலாளருக்கு வழங்கிய பணிப்புரைக்கு அமைவாக 38 வியாபார நிலையங்களுக்கு முன்பாகவும், தங்களது வியாபார நிலையம் 25-08-2020 முதல் மூடப்படுகிறது என சந்தை பூட்டப்பட்ட பின்னர் நேற்றிரவு 8 மணியளவில் அறிவித்தல் ஒட்டப்பட்டது.

இன்று அதிகாலை சந்தைக்குச் சென்ற வியாபாரிகள் இது அதிர்ச்சியாக இருந்துள்ளது.

நேற்று அதிகளவான திருமணம் மற்றும் வீடு குடிபுகுதல் போன்ற நிகழ்வுகள் இருந்தமையால் நாம் வியாபார நிலையங்களில் உதவியாளர்களை விட்டு விட்டுச் சென்றுவிட்டோம். அத்தோடு பல வியாபாரிகள் தகவல் சென்றடையவில்லை. சாதாரன ஒரு கூட்டத்திற்கு ஏழு நாட்களுக்கு முன் எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும். ஆனால் இதில் எந்த நடைமுறையையும் பின்பற்றாது முற் பகல் 11 மணிக்கு வாய் மொழி மூலம் அறிவித்து பிற்பகல் 3 மணி கூட்டத்திற்கு வருமாறு அழைத்தனர். அவ்வாறு சமூக மளிக்காதவர்களின் வியாபார நிலையங்களைப் பூட்டுவது என்பது அநியாயமான செயல்.

கொரோனா தாக்கத்திற்கு பின்னர் தற்போது நாம் வழமைக்கு திரும்பிக்கொண்டிருக்கும்வேளை கரைச்சி பிரதேசசபைத் தவிசாளரின் இந்த நடவடிக்கை எம்மை மேலும் பாதித்துள்ளது. அத்தோடு தொலைவில் இருந்து மரக்கறிக்களை கொண்டு வந்த விவசாயிகளும் பெரிதும் பாதிப்படைந்து செய்தறியாது நிற்கின்றனர் என பாதிக்கப்பட்ட வியாபாரிகள் தெரிவித்தனர்.

சந்தை வளாகத்தின் முன்பாக அவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்ட னர்.

இதன்போது அங்கு சமூகமளித்த கரைச்சி பிரதேச சபையின் செயலாளர், வியாபார நிலையங்களைப் பூட்டும் தீர்மானத்தை தவிசாளரின் பணிப்புக்கமைய வர்த்தகர் சங்கத்தின் தலைவரின் முன்னிலையில் மேற்கொண்டதாகவும், அதனடிப்படையில் நேற்றிரவு அறிவித்தல் ஒட்டப்பட்டதாகவும் தெரிவித்ததுடன், இது தமது தவறான நடவடிக்கை என்றும் வியாபாரிகள் மீண்டும் தங்க ளின் வியாபார நிலையத்தைத் திறந்து நடவடிக்கைளை மேற்கொள்ள முடியும் என்றும் கூறினார்.

பின்னர் சந்தைக்கு சென்ற கிளிநொச்சி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ச.பிரபாகரன், வியாபாரிகளைச் சந்தித்து கலந்துரையாடியதுடன் வியாபார நிலையங்களைத் திறந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், இந்த விடயம் குறித்து ஆராய்ந்து பதிலளிப்பதாகவும் தெரிவித்தார்.

### சர்ச்சையை ஏற்படுத்திய

## விக்னேஸ்வரன் உரை ஹன்சாட்டில் சேர்ப்பு

கொழும்பு, ஓக 25

தென்னிலங்கை அரசியல் பரப்பில் சர்ச்சையை ஏற்படுத்திய தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரனின் நாடாளுமன்ற உரை நாடாளுமன்ற ஹன்சாட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

உலகில் உயிர்வாழும் மூத்த மொழிகளில் ஒன்றும், இந்நாட்டின் முதல் சுதேச குடிமக்களின் மொழியிலும் வாழ்த்துக்களை தெரிவிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் கடந்த 20 ஆம் திகதி உரை ஆற்றினார். இதனை அடுத்து சி.வி.விக்னேஸ் வரனின் உரையை ஹன்சாட்டில் இருந்து நீக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனு நாணயக்கார கோரிக்கை விடுத்திருந்தார். இது குறித்து ஆராய் வதாக அன்றைய தினமே சபா நாயகர் மஹிந்த யப்பா அபேவர்தன தெரிவித்திருந்த போதும் விக்னேஸ்வரனின் உரையின் விவரிக்கப்படாத பதிப்பு நாடாளுமன்றத்தின் ஹன் சார்ட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

# எம்.சி.சி. உடன்படிக்கையை ஒழிக்க அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் திட்டவட்டம்



எம்.சி.சி.உடன்படிக்கையை இல்லாது செய்ய அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டால், அதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி இந்த உடன்படிக்கையை கிழித்தெறிய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

இந்த அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலின்போதும், பொதுத் தேர்தலின்போதும் வெற்றி வாய்ப்பை பெற்றுக் கொள்வதற்காக, மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியது.

வேலைத் திட்டங்களை முன்வைத்தது. இப்போது இதனை நிறைவேற்றக்கூடிய காலம் வந்துவிட்டது. மக்களுக்கு நிவாரணம் வழங்கக்கூடிய வேலைத்திட்டங்களையும், அபிவிருத்திகளையும் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளுக்கு நாம் எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம்.

அதேநேரம், நாட்டுக்கு எதிரான எந்தவொரு செயற்பாட்டையும் நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதையும் இவ்வேளையில் கூறிக்கொள்கிறோம்.

எம்.சி.சி. உடன்படிக்கை தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்று இன்று பலரும் கேட்கிறார்கள். தேர்தல் காலங்களின்போது, இவர்கள் இந்த உடன்படிக்கை தொடர்பாக ஒரு நல்ல விடயத்தைக் கூடக் கூறவில்லை.

எனவே, முதல் வேலையாக நாடாளுமன்றின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி இந்த உடன்படிக்கையை கிழித்தெறிய வேண்டும் என நாம் அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கின்றோம்.

இதற்கு எதிரான தீர்மானத்தை அரசாங்கம் நாடாளு மன்றுக்குக் கொண்டுவந்தால், ஐக்கிய மக்கள்சக்தியாகியநாமும் அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம்.

அடுத்தவாரம் இந்த உடன்படிக்கைக்கு எதிரான யோசனையை கொண்டுவந்தால்கூட நாம் தயாராகவே இருக்கிறோம். – எனக் கூறினார்.

## ஒரு வாரத்தில் தயாரிக்கப்பட்ட '13' திருத்தத்தில் குறைபாடுகள்

### இப்படிக் கூறுகின்றார் கெஹலிய



கொழும்பு, ஓக 26

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் ஒரு வார காலத்தில் தயாரிக்கப்பட்டுள்ள ஒரு திருத்தமாகும் என்பதால் அதில் குறைபாடுகள் இருக்க முடியும். எனவே, அது தொடர்பில் எதிர்காலத்தில் பேச்சு நடத்தப்படும்.

- இவ்வாறு வெகுஜன ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நல்லாட்சி அரசால் உருவாக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் சுயாதீனமாக செயற்படவில்லை. அதைச் சுயாதீனமாக்குவது தொடர்பில்சில மாற்றங்களை எதிர்வரும் அரசமைப்பு திருத்தம் மூலம் மேற்கொள்வதற்கு அரசு எதிர்பார்த்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆணைக்குழுவை நியமித்த அரசமைப்பு பேரவை அங்கத்தவர்கள் 10 பேரில் 7 பேர் நல்லாட்சி அரசை சேர்ந்தவர்கள் என்றும், அதில் செயற்பட்ட மூன்று சிவில் செயற்பாட்டாளர்கள் தொடர்பில் சிக்கல்கள் நிலவுகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இம்முறை பொதுத் தேர்தலில் தமது வெற்றிக்காக ஒத்துழைப்பு வழங்கிய மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கண்டி ஹரிஸ்பத்துவவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுயாதீன ஆணைக்குழு எனக் குறிப்பிடப்படுகின்றபோதும் அடிப்படை விடயங்கள் கூட அதில் மீறப்பட்டுள்ளன. அதனால் அதனை நிவர்த்திசெய்ய வேண்டியது அவசியமாகும்.

தகவல் அறியும் சட்டமூலம், ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஐந்து வருட காலத்துக்கு மட்டுப்படுத்தல், இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது போன்ற காரணங்கள் 20ஆவது அரசமைப்பில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாட்டு மக்கள் தற்போதைய அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொடுத்துள்ளமை நாட்டுக்குப் பொருத்தமான அரசமைப்பொன்றை உருவாக்குவதற்காகவே ஆகும்.

19ஆவது அரசமைப்பு திருத்தம் நாட்டின் எதிர்காலப் பயணத்துக்குப் பாரிய தடையாக அமையும். அதன் விளைவுகளை கடந்த காலங்களில் கடுமையாக அனுபவிக்க நேர்ந்தது.

விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் வெளியிடும் கூற்றுக்கள் இனவாதம் சார்ந்தவை. தேசிய ஒற்றுமைக்கு அது பெரும் பாதிப்பாக அமையும் என்று நாம் நினைக்கின்றோம் – என்றார்.

## பாடசாலைக்கு மாணவர்களை அனுமதித்தல் கல்வி அமைச்சில் முக்கிய கலந்துரையாடல்

பாடசாலைகளுக்கு மாணவர்களை வழமைபோன்று அழைப்பதற்கான நிலைமை உள்ளதா என்பது தொடர்பாக நேற்று (செவ்வாய்க்கிழமை) கல்வி அமைச்சில் ஆராயப்பட்டது.

கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதார அமைச்சின் உயரதிகாரிகள் இந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடலில் ஈடுபட்டனர் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

200 இற்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில், மாணவர்களை வழமை போன்று உள்வாங்குவதற்கான சூழல் உள்ளதா என்பது தொடர்பாக ஆராயப்பட்டது.

இதேநேரம் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் பாடசாலைகளில் காலை 7.30 மணி முதல் பகல் 1.30 மணி வரை அனைத்து மாணவர்களுக்கும் கல்விநடவடிக்கைகளைமுன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தத் தீர்மானம் தொடர்பாக நேற்றைய கலந்துரையாடலின்போது ஆராயப்பட்டது.

## புலி உறுப்பினர் குடும்பங்களுக்கு ஒருபோதுமே நட்டஈடு கிடையாது

### கெஹலிய திட்டவட்ட அறிவிப்பு

கொழும்பு, ஓக 26

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவர்கள் காணாமல் போயிருந்தால், அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கலாமெனத் தெரிவித்த அமைச்சரவையின் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, புலிகளின் குடும்ப உறுப்பினர்களுக்கு நட்டஈடு வழங்குவது பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதாக அமையுமெனவும் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் எவரும் காணாமற்போயிருந்தால், அவர்களைக் தேடவேண்டிய அவசியம் இல்லை எனத்தான் கூறினார் என ஊடகங்களில் வெளியாகும் செய்திகளில் உண்மையில்லை எனவும் அவர் கூறினார்.

முதலில், காணாமற்போதல் என்பதன் வரைவிலக்கணத்தை விளங்கிக் கொள்ள வேண்டுமென்றும் கூறிய அமைச்சர், காணாமல் போனவர்கள் என்று கூறுவார்களாக இருந்தால், அவர்களைத் தேட முடியாதென்றே அர்த்தமெனவும் சிலவேளைகளில், அவர்கள் வெளி நாடுகளுக்குச் சென்றிருக்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

காணாமற்போனவர்கள் தொடர்பில் கண்டறிவதற்காக அலுவலகத்துக்கு வழங்கப்பட்டுள்ள பெயர்களில் அரைவாசிப் பேர், வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது என்றும் கூறிய அமைச்சரவையின் பேச்சாளர், நாட்டில் யுத்தம் ஒன்று நடைபெற்றது என்பதை மறந்துவிடக்கூடாது. இராணுவம், புலிகள் என இரு தரப்பிலிருந்தும் காணாமற்போனவர்கள் இருக்கிறார்கள். இவர்களைத் தேடுவது பெறுமதியான விடயம்தான். ஆனால், காணாமல்போனவர்களைத் தேடுவதற்கென்று ஒரு முறை இருக்கிறது எனவும் தெரி வித்தார்.

தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களது குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கு நட்டஈடு அல்லது நிவாரணங்களை வழங்குவதென்பது பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதாகும் – என்றார்.

நீங்களை எங்களைக் கொன்றொழியுங்கள்; உங்களது குடும்பத்துக்கு நாங்கள்நட்டஈடு வழங்குகிறோம் என்று அரசு கூறுவதாகவே இது அமையுமென்றும் கூறிய அவர், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் குடும்பத்தினருக்கு நட்டஈடு வழங்குவது சரியா? எனவும், இதன்போது கேள்வி எழுப்பினார்.

## யாசகம் செய்துவந்த கோடீஸ்வரர் திருட்டுச் சம்பவத்தில் சிக்கினார்!

கொழும்பு, ஓக 26

கொச்சிக்கடை தேவாலயத்துக்கு அருகில் பிச்சை எடுத்துக்கொண்டிருந்த போது, தள்ளுவண்டியைத் திருடிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர், மஹரகம, பமுனுவ பிரதேசத்தைச் சேர்ந்த கோடீஸ்வரர் எனத் தெரியவந்துள்ளது எனப்பொலிஸார்தெரிவித்தனர்.

64 வயதுடைய அந்த நபருக்கு சொகுசு மாடியைக் கொண்ட வீடொன்றும், அவ்வீட்டு வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட சொகுசு காரொன்று உள்ளிட்ட இரு கார்களைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

அத்தோடு அந்த நபர், அவரது வீட்டில் மேல்மாடியை வாடகைக்கு விட்டு மாதாந்தம் 30 ஆயிரம் ரூபா வைச் சம்பாதிக்கும் அதேவேளை, யாசகத்தின் மூலம் தினமும் 5 ஆயிரம் ரூபாவைச் சம்பாதித்து வருகின்றார் எனவும் தெரியவந்துள்ளது.

கொழும்பு, கொச்சிக்கடை, ஜம்பட்டா வீதியில் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பழங்களுடன் தள்ளு வண்டியொன்றுதிருடப்பட்டசம்பவம்தொடர்பில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணை மேற்கொண்ட பொலிஸார், சி.சி.ரி.வி. கமராவின் உதவியுடன் நேற்றுமுன்தினம் குறித்த நபரைக் கைதுசெய்திருந்தனர்.

இந்த வீடியோ காட்சியில், திருடப்பட்ட தள்ளுவண்டியை அவர் தள்ளிச் செல்வது கண்டறியப்பட்டதோடு, இதனைத் தொடர்ந்து அவர் அந்தத் தேவாலயத் துக்குஅருகில்தினமும்யாசகம்செய்வதையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

தள்ளுவண்டியைசிறியதூரத்துக்குத் தள்ளிச் சென்ற அவர், நபரொருவருக்கு 5 ஆயிரம் ரூபாவைக் கொடுத்து தனது வீட்டுக்குச் கொண்டு சென்றுள்ளமை வீடியோ காட்சியில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# சட்டதிட்டங்களைக் கடுமையாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்!

## என்கிறார் நீதி அமைச்சர் அலி சப்ரி



கொழும்பு, ஓக.26

குற்றங்களை குறைப்பதற்காக, சட்டத்திட்டங்களை கடுமையாக்க அரசாங்கம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கும் என நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) இடம்பெற்ற நிகழ் வொன்றை அடுத்து, ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் மரண தண்டனை கடந்த 50 வருடங்களாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவருவது என்பது ஓரிரு நாள்களுக்குள் செய்து முடிக்கக்கூடிய காரியம் கிடையாது.

அமைச்சரவை முதலில் அங்கீகாரம் வழங்க வேண்டும். பின்னர் நாடாளுமன்றில் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு சில காலம் தேவைப்படும். எவ்வாறாயினும், இதற்கு தேவையான அனைத்து முயற்சிகளையும் நாம் மேற்கொள்வோம்.

மக்களின் பாதுகாப்புக்காக ஜனாதிபதி மேற்கொள்ளும் திட்டங்களுக்கு நாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம். இந்த அரசாங்கத்தில் முன்னாள் அரசாங்கத்தின் குறைபாடுகள் இருக்கா. நாம் பொலிஸாரின் பலத்தை அதிகரிக்க வேண்டும் எனக் கூறினார்.

## வழமைக்குத் திரும்புகிறது வடக்குக்கான ரயில் சேவை





யாழ். – கொழும்பு ரயில் சேவை மீண்டும் வழமைக்கு திரும்பியுள்ளதாக யாழ்ப்பாண ரயில் நிலையப் பிரதான அதிபர் எஸ்.பிரதீபன் தெரிவித்தார்.

கொரோனாக் காலத்தின் பின்னர் தற்போதுள்ள ரயில் சேவை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் முதல் நாட்டில் ஏற்பட்ட கொரோனாத் தொற்று அச்சம் காரணமாக யாழ்ப்பாணம், கொழும்பு ரயில் சேவைகள் தடைப்பட்டிருந்த நிலையில் கடந்த மாதம் மீண்டும் ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. தற்போது வழமைபோல் ரயில் சேவைகள் இடம்பெற்று வருகின்றன எனப் பிரதீபன் தெரிவித்தார்.

மேலும் தற்போது இடைநிறுத்தப் பட்டுள்ள நகர் சேர் கடுகதி ரயில் சேவை எதிர்வரும் 29,30,31 மற்றும் முதலாம் திகதிகளில் பரீட்சார்த்தமான சேவையை ஆரம்பிப்பதற்கு ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கொரோனா காலத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த இந்தச் சேவையானது எதிர்வரும் 29ஆம் திகதி முதல் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப் படவுள்ளது. எனவே பயணிகள் தங்களுக்குரிய முன் ஆசனப் பதிவுகளை யாழ் ரயில் நிலையத்தில் மேற்கொள்ள முடியும். – என்றார்.

## கோர விபத்தில் 2 இளைஞர்கள் பரிதாபச் சாவு!



வெல்லவாய – தணமல்வில வீதியில், நெலுவயாய சந்தியில் இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு வெல்லவய – தணமல்வில வீதியில், கித்துல்கோட்டே, நெலுவயாய சந்திக்கு அருகே இடம்பெற்ற விபத்திலேயே இந்த இரு இளைஞர்களும் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களும் எதிரே வந்த கப் வாகனத்துடன் மோதியதில் இவ்விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த செவணகல, கலுதியகமவைச் சேர்ந்த 19 வயதான, ஜி.ஜி. இந்திக சாமல் சத்துரங்க மற்றும் மோட்டார் சைக்கிளின் பின்னாலிருந்து வந்த 17 வயதான கசுன் ரீமால் மூணசிங்க ஆகியோரே மரணமடைந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதிக வேகத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்தியமை மற்றும் கவனக்குறைவாக வாகனம் செலுத்தியமை காரணமாக இவ்விபத்து இடம்பெற்றுள்ளது என ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

விபத்து தொடர்பில் கப் வாகனத்தின் சாரதியைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபரை வெல்லவாய நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் தணமல்வில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வெளிநாடுகளில் சிக்கிய 296 பேர் நாடு திரும்பினர்!

கொரோனா வைரஸ் தொற்று பரவலினால் வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதற்கமைய தென்கொரியா மற்றும் கட்டார் ஆகிய நாடுகளில் சிக்கியிருந்த 296 இலங்கையர்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி தென்கொரியாவில் இருந்து 275 இலங்கையர்கள் இன்று அதிகாலை பண்டாரநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் வேலைவாய்ப்புக்காக தென் கொரியா சென்றிருந்த இலங்கையர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் கட்டார் – டோஹாவிலிருந்து 21 இலங்கையர்கள் நேற்று அதிகாலை 1.20 மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர். விமான நிலையத்தை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

பரிசோதனை முடிவுகள் வெளிவந்தவுடன் அவர்களை தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான செயலமர்வு நேற்று ஆரம்பமாகியது!

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகள் தொடர்பாகத் தெளிவுபடுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான செயலமர்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) ஆரம்பமாகியது.

நாடளுமன்றத்தின் முதலாவது குழு அறையில் இடம்பெறுகின்ற இந்த செயலமர்வு நேற்றும் இன்றும் தொடரவுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக்க அறிவித்துள்ளார். இந்த பயிற்சி நெறியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்றத்தின் ஆரம்பகட்ட விடயங்கள் தொடர்பாகத் தெளிவுபடுத்தும் நோக்கில், இந்த பயிற்சி நெறி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் முதியவர் மரணம் மூவர் கைது!

வவுனியா – கனகராயன்குளம் பகுதியில் முதியவரின் மரணத்துடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் மூன்று பேரை கனகராயன் குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கனகராயன்குளம் பகுதியில் காயங்களுடன் முதியவர் ஒருவரின் சடலம், கடந்த 22 ஆம் திகதி பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டது.

அந்த முதியவரின் முகம் மற்றும் உடல் பகுதிகளில் காயங்கள் காணப்பட்ட நிலையில் கொலை என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

மேலும், சடலத்தை பார்வையிட்ட வவுனியா நீதிவான் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத் துமாறு உத்தரவிட்டிருந்தார். சடலம் கண்டெடுக்கப்பட்டு, வவுனியா வைத்தியசாலையில் உடற் கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

பரிசோதனை முடிவுகளின் பிரகாரம் அந்த முதியவரின் கழுத்து நெரிக்கப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்திருந்தமையுடன், அடிகாயங்கள் ஏற்பட்டுள்ளமையும் உறுதிப்படுத்தப்பட்டது.

அதன் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் கனகராயன்குளம் – பெரியகுளம் பகுதியை சேர்ந்த 16, 19, 18 வயது மதிக்கத்தக்க மூன்று இளைஞர்களை சந்தேகத்தின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்திருந்தனர்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார், அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் முன்னெடுத்துள்ளனர்.

## மன்னாரில் யுவதி கொலை: பிரதான சந்தேகநபர் கைது!

மன்னார் உப்பளம் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட நிலையில் கடந்த 13 ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்ட நெடுந்தீவைச் சேர்ந்த டொறிக்கா ஜ்ஜின் என்ற இளம் யுவதியின் கொலை தொடர்பாக தேடப்பட்டு வந்த பிரதான சந்தேக நபரான தாய் மாமன் நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) வவுனியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னாரில் இருந்து சென்ற விசேட பொலிஸ் குழுவினர் மேற்படி பிரதான சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

அந்த யுவதி கடந்த 11 ஆம் திகதி மாலை யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னாரிற்கு அழைத்து வரப்பட்டுள்ள நிலையில், அன்றைய தினம் இரவு மன்னார் சௌத்பார் பகுதிக்கு நடந்து சென்றுள்ளார்.

கொலை செய்யப்பட்ட யுவதி , யுவதியின் சகோதரி, அவரது பெரிய தாயின் மகனின் மனைவி மற்றும் தாய் மாமன் ஆகியோர் மன்னார் சௌத்பார் ரயில் வீதியை நோக்கி நடந்து சென்றுள்ளனர். இந்த நிலையிலே அந்தப் பகுதியில் சம்பவம் இடம் பெற்றுள்ளதோடு, அந்த யுவதியின் சடலம் உப்பளம் பகுதியில் உள்ள பாத்தியில் வீசப்பட்டுள்ளது.


எனினும் சடலம் 13 ஆம் திகதி காலையிலே அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த நிலையில் அந்த கொலை தொடர்பாக மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்க, உதவி பொலிஸ் அத்தியட்சகர் கஸ்தூரி ஆராட்சி ஆகியோரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.கிருஷாந்தன், பதில் நிலைய பொறுப்பதிகாரி மஞ்சுள பியதிஸ்ஸ ஆகியோரின் வழி நடத்தலில், உதவி பொலிஸ் பரிசோதகர் ஹங்காபதி ஆர்த்தனன் தலைமையிலான விசேட பொலிஸ் குழுவினர் துரித கதியில் செயல்பட்டனர்.

இதன் போது பாடுகொலை செய்யப்பட்ட யுவதியின் சகோதரி மற்றும் பெரிய தாயின் மகனின் மனைவி ஆகியோர் யாழ்ப்பாணத்தில் வைத்து கடந்த 22 ஆம் திகதி கைது செய்யப்பட்டு மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் இந்தக் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான யுவதியின் தாய் மாமனார் தலைமறைவாகி இருந்தார். மன்னார் பொலிஸார் விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டு பிரதான சந்தேக நபரை வவுனியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். அவர் தற்போது மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

விசாரனைகளின் பின்னரை அந்த பிரதான சந்தேக நபர் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

# மாகாண சபை முறை நீக்கப்படவே கூடாது

## வலியுறுத்துகிறார் சிவஞானம்



யாழ்ப்பாணம்,ஓக.26

தமிழர்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வின் ஆரம்பப் புள்ளியாகக் கொண்டு வரப்பட்ட மாகாண சபை முறைமை நீக்கப்பட கூடாது என தெரிவித்துள்ள வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சரத் வீரசேகர, விமல் வீரவன்ஸ,உதய கம்மன்பில ஆகியோரின் கருத்துக்களை அரசாங்கம் கூட கணக்கில் எடுக்காது என்றும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மாகாண சபை முறைமை என்பது ஆரம்ப காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வின் ஆரம்பப் புள்ளியாக முன்னெடுக்கப்பட்ட ஒன்று. தனியே அது வடக்கு கிழக்குக்கு மட்டும் என்று உருவாக்கப்படவில்லை. நாட்டின் அனைத்துப் பிரதேசங்களுக்கும் என்றே மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டது. எனினும் அந்த மாகாண சபை முறைமை கூடப் போதாது, அதிகாரங்கள் மேலும் பகிரப்பட வேண்டும் என்று தமிழ் மக்களாகிய நாம் கூறி வருகின்றோம். ஏனெனில் மத்தியில் மட்டும் அதிகாரங்கள் என்பது நாட்டுக்கு நல்லதல்ல. நாட்டில் வாழும் சிறுபான்மை இனத்திற்கும் நல்லது அல்ல.

மத்தியில் மட்டும் அதிகாரங்கள் குவிக்கப் படாமல் மாகாணங்களுக்கும் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும். அதனாலேயே மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்டது. எனினும் மாகாண சபைகளுக்குக் கூட முழுமையான அதிகாரங்கள் இதுவரை வழங்கப்படவில்லை. தற்போதைய அரசாங்கத்தில் இருக்கின்ற சரத் வீரசேகர என்பவர் படு இனவாதி. ஐ. நாவிற்குப் பல தடவைகள் சென்று இலங்கையில் இனப்படுகொலை நடைபெறவில்லை என்ற கருத்தைக் கூறுவருபவர்.

கோட்டாபய அரசில் தற்போது அங்கம் வகிக்கின்ற சரத் வீரசேகர, விமல் வீரவன்ஸ,உதய கம்மன்பில ஆகியோரது கருத்துக்களை அரசாங்கம் கூட கணக்கில் எடுக்காது என்றே நான் கருதுகின்றேன்.

எனவே இவர்களின் விமத் தனமான கருத்துக்களை நாம் கணக்கில் எடுக்கத் தேவையில்லை. மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே இந்த நாட்டில் மாகாண சபை முறைமை நீக்கப்பட வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழர்களின் பிரச்சினைக்கு ஆரம்பப் புள்ளியாக முன்னெடுக்கப்பட்ட மாகாண சபை முறைமை இருக்க வேண்டும். மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

ஏனெனில் முழு அதிகாரங்களும் மத்தியில் குவிந்தால் ஏனைய இனத்தவர்களின் உரிமைகள் கேள்விக்குறியாகவே இருக்கும்.

சரத் வீரசேகர போன்றவர்களின் கருத்துக்கள் நாட்டின் ஜனநாயகதர திற்குப் பாதகத்தை ஏற்படுத்தலாம். – என்றார்.

# இலங்கைத் தீவின் பூர்வீகக் குடிகள் தமிழர்களா? நேரடி விவாதத்துக்கு வருமாறு விக்கிக்கு சவால்!

## உதய கம்மன்பில பகிரங்கமாக விடுத்தார்

கொழும்பு, ஓக. 26

இலங்கையில் பூர்வீகக் குடிகள் தமிழர்களே என்ற கருத்துத் தொடர்பாக விவாதிக்க வருமாறு சி.வீ.விக்னேஸ்வரனுக்கு அமைச்சர் உதய கம்மன்பில பகிரங்க சவால் விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு விவாதிக்க வருமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையின் ஆதிக் குடிகள் தமிழர்களா என்பது தொடர்பாக என்னுடன் பகிரங்க சவாலுக்கு வருமாறு, நான் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கு சவால் விடுக்கிறேன். அவரிடமுள்ள அனைத்து தரவுகளையும் தோற்கடிக்க நாம் தயாராகவே இருக்கிறோம் என்பதை இவ்வேளையில் கூறிக் கொள்கிறேன்.

இனவாதத்தை வடக்கு மக்கள் நிராகரித்துள்ளார்கள். அவருக்கு 21 ஆயிரத்து 554 வாக்குகள் மட்டுமே கிடைத்துள்ளன. தனது அரசியலுக்காக அவர் இன்று இனவாதத்தைக் கையில் எடுத்துள்ளார்.

எனினும், இனவாத அரசியலை கைவிட்டுள்ள சுதந்திரக் கட்சியின் உறுப்பினரான அங்கஜன் இராமநாதனுக்கு 36 ஆயிரத்து 365 வாக்குகளும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு 32 ஆயிரத்து 146 வாக்குகளும் வடக்கிலிருந்து கிடைத்துள்ளன. இதிலிருந்தே வடக்கு மக்கள் இனவாதத்தை விரும்பவில்லை எனும் சமிக்ஞையை வெளிப்படுத்தியுள்ளனர். அவர்கள் இனவாதிகளுடன் இணைந்து பயணிக்கத் தயாராக இல்லை. மாறாக தெற்குடன் இணைந்து ஒன்றிணைந்து பயணிக்கவே விரும்புகிறார்கள்.

இந்த காரணத்தினால்தான் விக்னேஸ்வரன் போன்றோர் மீண்டும் மீண்டும் இனவாதத்தை தூண்டும் வகையில் செயற்பட்டு வருகிறார்கள் – எனக் கூறினார்.

# மஞ்சள் தூளில் கோதுமை மா கலப்படம் என்று எச்சரிக்கை

சந்தைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள மஞ்சள் தூளில் கோதுமை மா கலந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது 80 வீதமான மஞ்சள் தூளில் கலப்படம் உள்ளமை தெரியவந்துள்ளது.

சந்தைகளிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள், தர நிர்ணய கட்டுப்பாட்டு சபையினூடாக பரிசோதிக்கப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த பரிசோதனை மூலம் மஞ்சள் தூளில் 80 வீத கோதுமை மா கலக்கப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக சபையின் தலைவர், ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஷாந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், மஞ்சள் தூளில் கலப்படம் செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# புத்தளம் பகுதி வாய்க்காலில் வயோதிப மாதுவின் சடலம்

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புழுதிவயல் பகுதியில் உள்ள வாய்க்காலில் இருந்து வயோதிபப் பெண்ணொருவரின் சடலம் ஒன்று நேற்று முன்தினம் பிற்பகல் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற பொலிஸார் நீரில் மூழ்கிய நிலையில் இருந்த சடலத்தை மீட்டுப் பிரேதப் பரிசோதனைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பியுள்ளனர்.

நீரில் மூழ்கி உயிரிழந்தவர் முந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கணமூலை – குறிஞ்சாவெட்டைப் பகுதியைச் சேர்ந்த 71 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தாயெனஇனங்காணப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் புத்தளம் மற்றும் முந்தல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இனி இது...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

படியான தீர்ப்பை மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கி விட்டது. ஆனால் அதற்கான தண்டனைத் தீர்ப்பை நீதிமன்ற அவமதிப்பு வழக்கையும் விசாரித்து விட்டு வழங்குவதாக நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

இப்போது, நீதிமன்ற அவமதிப்பு வழக்கின் மீதான விசாரணை வரும் 15, 16, 17ஆம் திகதிகளில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நடைபெறவிருக்கின்றது.

மூல வழக்கில், இடைக்கால உத்தரவே, நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பாக வந்திருப்பதால், அந்த இடைக்கால உத்தரவை நடைமுறைப்படுத்த மறுத்தமை மூலம் நீதியரசர் விக்னேஸ்வரன் நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்தை இழைத்துள்ளார் என்று அர்த்தப்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

இந்த நீதிமன்ற அவமதிப்புக் குற்றங்கள் விடயத்தில் இரண்டு முக்கிய அம்சங்கள் உள்ளன.

ஒன்று – இதற்கான தண்டனை இவ்வளவுதான் என்று சட்டத்தில் வரையறுக்கப்படவில்லை. மேன்முறையீட்டு நீதிமன்றம் தனக்கு உசிதமான ஒரு தண்டனையை – பல வருடக்கணக்கான சிறை உட்பட – விதிக்கலாம்.

அடுத்தது – இந்த விடயத்தில் தண்டனை விதிக்கப்பட்டால் அதற்கு மேன் முறையீடு செய்யலாம், மேன்முறையீடு முடியும் வரை தண்டனை பெறாமல் இருக்கலாம் என்ற கதையேயில்லை. தண்டனை விதிக்கப்பட்டவுடனேயே அது நடைமுறைக்கு வந்துவிடும்.

உயர்நீதிமன்றத்தில் விண்ணப்பித்து, மேன்முறையீடு விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த விசாரணையின் போது பிணையில் வெளியே வர உயர்நீதிமன்றம் அனுமதித்தால் மட்டுமே வெளியில் வரமுடியும்.

இதற்கு நல்ல உதாரணம் ஞானசார தேரர். நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்துக்காக ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டது. அவர் சிறைக்குள் தள்ளப்பட்டார். மேன்முறையீடு செய்யப்பட்டது. ஆனால் அவர் வெளியில் வர முடியவில்லை. இறுதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மன்னிப்பு வழங்கியமையால்தான் அவர் வெளியில் வந்தார்.

அப்படி ஆபத்தான தீர்ப்பு ஒன்றை எதிர்நோக்கக் கூடிய இக்கட்டில்தான் நீதியரசர் இருக்கின்றார்.

அவர் தொடர்பில் ஒரு புற சீற்றத்தை இன்னொரு பக்கத்தால் தென்னிலங்கை காட்டக்கூடியது. அதன் மூலம் அவரை நாடாளுமன்றத்தில் இருந்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படலாம்.

2010 நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டி நாடாளுமன்றம் சென்ற சரத் பொன்சேகாவை சிறையில் அடைத்து, அதன் மூலம் எம்.பி. பதவியை பறித்த சரித்திரம் ராஜபக்ஷக்கள் ஆட்சியில் இருப்பதை மறந்துவிடாதீர்கள்.

சரி, இத்தகைய நெருக்கடி ஏதும் நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு ஏற்படக்கூடாது என்பதற்காக *'சாட்சியக் காரனின் காலில் விழுவதைப் பார்க்கிலும் சண்டைக்காரன் காலில் விழுவது மேல்'* என்பது போல சில தரப்புகள் வழக்குத் தொடுத்த டெனீஸ்வரனுடனேயே தொடர்பாடல்களை ஆரம்பித்திருப்பதாக ஒரு தகவல்.

தமிழர் தேசத்தின், தேசியத்தின் பொது நலன் கருதி இந்த வழக்கை வாபஸ் பெற்று, விடயத்தை சுமுகமாகத் தீர்க்க டெனீஸ் தயார் எனத் தெரிகின்றது.

ஆனால் விடயம் இப்போது அவர் கையில் இல்லை. அதைத் தாண்டிவிட்டது.

இது டெனீஸ்வரன் தொடுத்த வழக்கு என்றாலும், நீதிமன்றத்தை – அதுவும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தை – அவமதித்த வழக்கு. அதனால் டெனீஸ்வரன் வழக்கை வாபஸ் பெற முயன்றாலும் நீதிமன்றம் விடுமா என்பது தான் கேள்வி.

இதுதான் நிலைமை.

மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலில் எதிர்த்துப் போட்டியிட்ட சரத் பொன்சேகா, அதன் பின் எம்.பியாகியும் நாடாளுமன்றத்தில் இருக்க முடியவில்லை. சிறையில் இருக்க வேண்டியவரானார்.

அப்படி ஒரு நிலைமை நீதியரசருக்கு வரக் கூடாது. ஆனால் நீதியரசர் விக்கிக்கு எதிரான உணர்வலைகள், தென்னிலங்கைச் சிங்களத்தின் ஊடகங்கள் மூலம் பெரும் சீற்றமாகக் கிளப்பப்பட்டு, தென்னிலங்கையின் மனநிலையை (Mind set) மோசமாகப் பாதித்திருக்கின்றது.

ஆக, காலைச் சுற்றிய பாம்பு கடிக்காமல் கழன்றால் அது நாம் செய்த புண்ணியம்தான்.!

–மின்னல்–

காலைக்கதிர் Kalaikkathir

# விக்கியின் உரையை நீங்கள் நீக்கினாலும் வரலாற்றினால் தமிழ் மூத்த மொழியேதான்!

## அடித்துக் கூறுகின்றார் சிவாஜிலிங்கம்

புதிய நாடாளுமன்ற முதல்நாள் அமர்வில் சத்திய பிரமாணம் மேற்கொண்டு சபாநாயகர் தெரிவு இடம்பெற்ற பின்னர், அவருக்கு வாழ்த்து தெரிவித்து, சி.வீ.விக்னேஸ்வரன் ஆற்றிய உரை சிங்கள இனவாதிகளை கொதித்தெழ வைத்துள்ளது என தமிழ்த் தேசிய கட்சியின் பொது செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பண்டாரவன்னியனின் வெற்றி நாள் நினைவு யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. அதன் போது கருத்துத் தெரிவிக்கையிலேயேவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் –

எங்களுடைய வரலாற்றை, எங்களுடைய விருப்பங்களை நாம் தெரிவிப்பது அவர்களுக்கு கொதிப்பினை ஏற்படுத்துகிறதென்றால் எங்களை விட்டுவிடுங்கள், நீங்கள் உங்களுடைய வழியில் செல்லுங்கள், நாங்கள் எங்களுடைய வழிகளைப் பார்த்துக் கொள்கின்றோம்



என எண்ணத் தோன்றுகின்றது.

குறிப்பாக 6 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில்தான் சிங்கள மொழி உருவாகியது. அத்தோடு அவர்களுடைய சிங்கள வரலாற்றினைக் கூறும் மகாவம்சம் கூட பாலி மொழியில்தான் எழுதப்பட்டுள்ளது. தமிழருக்கான வர லாறு தமிழ் மொழியில் எழுதப்பட்டும் அது பின்னர் வேறு மொழிகளில் மாற்றி அமைக்கலாம்.

தமிழ் மொழி தொன்மையான மொழி. பல்லாயிரம் ஆண்டுகளைத் தாண்டி தமிழ்மொழி காணப்படுகின்றது. செம்மொழிகளில் தமிழ் மொழியும் ஒரு மொழி என்று அங்கீகரிக்கப்பட்ட பின்னர் உலகத்திலே பல நிறுவனங்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அது மூத்த குடிமக்களினுடைய மொழி என உரையாற்றியதும் கூக்குரலிடுவதும் நாடாளுமன்ற பதிவேட்டில் இருந்து நீக்குவதை பரிசீலிப்பதாக சபாநாயகர் கூறுவதும் கீழ்த்தரமான, ஜனநாயக முறைக்கு விரோதமான ஒரு செயற்பாடாகவே நான் கருதுகின்றேன்.

நீங்கள் நீக்குவதோ வைத்திருப்பதோ எதுவாக இருந்தாலும் எமது மூத்த மொழி மூத்த மொழியாகவே தான் இருக்கும். அவ்வாறு இதை நீக்கினால் நாங்கள் சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்திடமும் அதேபோன்று கொமென் வெல்த் நாடாளுமன்ற ஒன்றியத்திடமும் சர்வதேச சமூகத்திடம் முறையிடுவோம். – எனவும் தெரிவித்துள்ளார்.

# சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாக்க இந்தியா உதவ வேண்டும்

## தூதுவருடனான சந்திப்பில் மு.கா. வலியுறுத்து

*கொழும்பு, ஓக. 26*

*புதிய அரசமைப்பில் சிறுபான்மையினரின் அபிலாஷைகள் பேணப்படுவதற்கு இந்தியா அக்கறை காட்ட வேண்டும் என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.*

*கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில், நேற்று தூதுவர் கோபால் பாக்லேயைச் சந்தித்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், புதிய அரசு மேற்கொள்ளவுள்ள அரசமைப்பு மாற்றம் தொடர்பில், இந்தியத் தூதுவருடன் பேச்சு நடத்தியது.*

மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலமுள்ள புதிய அரசு பிராந்திய, சிறுபான்மை கட்சிகளைக் கேளாமல் அரசமைப்பை மாற்றுவதற்கு எடுக்கும் முயற்சிகளால் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் அதிருப்தியடைந்துள்ளன. இவ்விடயத்தில் இந்தியா அவசரமாக அக்கறை செலுத்துவது குறித்தும் இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயிடம் இக்குழுவினர் விளக்கிக் கூறினர்.

கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில், பிரதித் தலைவர் ஹாபிஸ் நஸீர் எம்.பி. மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசல் காசீம், எம்.எஸ்.தௌபீக் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

புதிய அரசு அமைந்த பின்னர், நாட்டில் ஏற்படவுள்ள பிரதான மாற்றங்கள் பற்றியும், இந்த மாற்றங்களால் சிறுபான்மை சமூகங்களின் அபிலாஷைகள் இல்லாமல் செய்யப்படுவதைத் தடுக்கும் வகையிலும் இந்தியா உதவ வேண்டும் என்றும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப் பட்டது.

குறிப்பாக, அரசமைப்பின் 13 ஆவது சரத்தை மேலும் பலப்படுத்தி, மாகாண சபைகளின் அதிகாரங்களை மேலும் அதிகரிக்க வேண்டும் என்று இதில் கலந்து கொண்ட கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஹாபிஸ் நஸீர் கேட்டுக்கொண்டார்.

இலங்கைக்கு வழங்கப்படும் இந்திய வீட்டுத்திட்ட உதவிகள், கிழக்கு மாகாணத்திற்கு கிடைக்காதுள்ளமை தொடர்பிலும், இந்தியத் தூதுவருக்கு இதன்போது அவர் எடுத்துரைத்தார். இவ்வாறான பாரபட்சங்களால் இலங்கை முஸ்லிம்கள், இந்தியாவின் நடவடிக்கைகளில் அதிருப்தியுற்றுள்ளனர். எனவே, இவற்றைக் கருத்தில் கொண்டு செயற்படுமாறும் இந்தச் சந்திப்பில் வலியுறுத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விமான நிலையச் சேவைகளை இந்தியாவுக்கு விஸ்தரித்தல், இதனூடாக வர்த்தக தொடர்பாடலை ஏற்படுத்தல் மற்றும் மீனவர் துறைமுகத்தை அமைத்து, மட்டக்களப்பு மாவட்ட மீனவர்களின் தொழில் வாய்ப்புக்களுக்கு உரிய சந்தை வாய்ப்பை ஏற்படுத்தவும் இந்தியா உதவ வேண்டும் என்று ஹாபிஸ் நஸீர் எம்.பி. இதன்போது கேட்டுக்கொண்டார்.

மேலும், கிழக்கின் இயற்கை வளங்களைப் பொருளாதார அபிவிருத்திக்குப் பயன்படுத்துவதற்கேற்ப பயிற்சிகளை வழங்கும் பொருட்டு, தொழில்நுட்பப் பயிற்சி நிலையங்களைக் கிழக்கில் ஸ்தாபித்தல், கைத்தறித் துறையை நவீனமயப்படுத்தி இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவது பற்றியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குழுவினர், இந்தியத் தூதுவரிடம் பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்பில் இந்தியத் தூதுவருடன் இந்தியப் பிரதித் தூதுவர் வினோத் கே. ஜேகப் மற்றும் அரசியல், அபிவிருத்தி ஒத்துழைப்பு தலைமை அதிகாரியும் கவுன்சிலருமான திருமதி. பானு பிரகாஷ் ஆகியோரும் உடனிருந்தனர்.

# மாகாணச்சபைத் தேர்தலில் தொண்டமானின் மகளும்?



மாகாணச் சபைத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சார்பில், மத்திய மாகாணத்தில் அறுவர் களமிறங்கவுள்ளனர் என்றும், அவர்களில் இருவர் பெண்கள் என்றும், அக்கட்சியின் உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன என்று 'தமிழ்மிரர்' செய்தி வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் இ.தொ.காகாவின் சார்பில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களை, மீண்டும் தேர்தலில் களமிறக்குவதா என்பது தொடர்பில் ஆராயப்படுகின்றது.

அத்துடன், அமரர் ஆறுமுகன் தொண்டமானின் புதல்வியான விஜயலக்ஷ்மி மற்றும் இ.தொ.காவின் முக்கியஸ்தர் ஒருவரின் புதல்வியும் இம்முறைத் தேர்தலில் களமிறங்கவுள்ளனர் என்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஊவா மாகாண சபைத் தேர்தலில் ஊவா மாகாணசபையின் முன்னாள் அமைச்சர் செந்தில் தொண்டமான் களமிறங்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள கட்சியின் ஸ்தாபகத் தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் சிரார்த்த தின நிகழ்வின் பின்னர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் தெரிவும் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ்.வீதிகளுக்கு சி.சி.ரி.வி.கமெரா!

யாழ் மாநகர சபை, நல்லூர் பிரதேச சபை மற்றும் கோப்பாய் பிரதேச சபைகளில் இருக்கின்ற வீதிப்போக்குவரத்து நடைமுறையில் உள்ள முக்கியமான சந்திகளில் முதற்கட்டமாக 14 சி.சி.ரி.வி. கமராக்களை பொருத்துவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ். மாநகரமுதல்வர் இமானுவேல் ஆனோல்ட் தெரிவித்துள்ளார்.

யாழ் மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) யாழ் மாநகர சபையின் முதல்வர் இமானுவேல் ஆனோல்ட் தலைமையில் இடம்பெற்றது. இந்த அமர்வில் வீதிபோக்குவரத்து விபத்துக்களை குறைப்பதற்கான நடவடிக்கை தொடர்பாக கலந்துரையாடப்பட்டபோதே மாநகர முதல்வர் இவ்வாறு தெரிவித்தார்.

# ரஹங்கல வனத்தில் தீ!



போகஹகும்புர – ரஹங்கல வனப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7 அளவில் திடீர் தீப்பரவல் ஏற்பட்டதாகப்பொலிஸ்ஊடகப்பிரிவுதெரிவித்ததுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், வனப் பாதுகாப்பு அதிகாரிகள், வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து குறித்த தீயைக் கட்டுப்பாட்டக்குள் கொண்டு வந்துள்ளனர். தீ பரவலால் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லையென பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.08.2020 இல் வெளியிடப்பெற்றது.